Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 04 ஹிஜ்ரி 1428 சஃபான் 15 (20.09.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:355

விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட
மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கு
20% விசேடசலுகை
லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=
259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
திருமுருகன் கொம் நெற்
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253
குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993

# நவம்பர் 17 இல் ஜனாதிபதித் தேர்தல்!

கொழும்பு

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட - ஐந்தாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் என தேர்தல் திணைக்களம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளோர் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யலாம். அன்று காலை 9 மணிமுதல் 11 மணிவரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் ஒக்ரோபர் 6 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கட்டுப்பணத்தைச் செலுத்த வேண்டுமென்றும், வேட்புமனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகளை ஒக்ரோபர் 7 ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் முடிந்த ஆறு மணிநேரத்துக்குள் தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிடுவோர் 50 ஆயிரம் ரூபாவையும், சுயேட்சையாகப் போட்டியிடுவோர் 75 ஆயிரம் ரூபாவையும் கட்டுப்பணமாகச் செலுத்தவேண்டும் என்றும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## இரு வேட்பாளர்கள் குறித்தும் புலிகளுக்கு நம்பிக்கையில்லை!

### ஏ.எவ்.பி. பேட்டியில் தமிழ்ச்செல்வன்

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் தொடர்பாகவும் தமக்கு நம்பிக்கையில்லையென விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஏ.எவ்.பிக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் சமாதானத்துக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது மற்றைய வேட்பாளர் சமாதானத்தை ஏற்படுத்தும் விதமாகச் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்.

இந்த இரண்டு வேட்பாளர்களும் உறுதிமொழிகளை நிறைவேற்றுவது தொடர்பாக எமக்கு நம்பிக்கையில்லை. இதனால் ஜனாதிபதித் தேர்தல் குறித்து நாம் அக்கறை செலுத்தவில்லை.

ஜனாதிபதி தேர்தல் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வை வழங்கும் தேர்தல் அல்ல. தேர்தலை விடவும் போர்நிறுத்தத்தைப் பாதுகாப்பது தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் கவனம் செலுத்தியுள்ளனர். எனினும் அரசாங்கம் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் (12 ஆம் பக்கம் பார்க்க)

### தேசியத் தலைவர் பிரபாகரனின்

## படத்தை விழுங்குமாறு படையினர் நிர்ப்பந்தம்!

திருகோணமலை

தேசியத் தலைவரின் உருவப்படத்தை பேர்ஸினுள் வைத்திருந்த இளைஞரை கடுமையாகச் சோதனையிட்ட படையினர் அந்தப் படத்தை வாய்க்குள் போட்டு விழுங்குமாறு நிர்ப்பந்தித்தனர்.

திருகோணமலை - மூன்றாம் கட்டைப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை இந்த வீதியிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடிமீது கைக்குண்டு வீசப்பட்டது. இதன்பின்னர் அந்தப்பகுதிக்கு வந்திருந்த இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் ரோந்துப் பிரிவினர் அந்தப்பகுதியில் சென்ற மேற்படி இளைஞனை (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக் கொலைகள்!

### வவுனியாவில் உளவாளி.....!

வவுனியா

வவுனியா - பட்டைக்காடு என்ற இடத்தில் இராணுவ உளவாளியாக செயற்பட்டுவந்த முன்னாள் புளொட் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்றுக்காலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

வவுனியா - கணேசபுரத்தைச் சேர்ந்த பத்துப்பிள்ளைகளின் தந்தையாரான செல்லத்துரை யோகானந்தராசா (வயது 45) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவர். நேற்றுக்காலை 8.45 மணியளவில் மன்னார் வீதியிலுள்ள பட்டைக்காடு என்ற இடத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தமது தந்தையாரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிள் ஒன்

## 'விடுதலைப் பேரொளி' பிரான்ஸில் வெளியீடு!

பாரிஸ்

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் வாழ்வியல் குறிப்புக்கள் சாதனைகள் எதிர்கொண்ட சோதனைகளை வெளிப்படுத்தி நிற்கும் 'விடுதலைப் பேரொளி' ஆவண நூல் பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் வெளியிடப்பட்டது.

ஈழமுரசு பத்திரிகை நிறுவனத்தால் அச்சிடப்பட்ட இந்த நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் மாணி நாகேஸ் தலைமையில் இடம்பெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் (12 ஆம் பக்கம் பார்க்க)



அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தல் குறித்து நாம் அக தை மற்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சுட்டுக் கொலைகள்!

## வவுனியாவில் உளவாளி.....!

வவுனியா

வவுனியா - பட்டைக்காடு என்ற இடத்தில் இராணுவ உளவாளியாக செயற்பட்டுவந்த முன்னாள் புளொட் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்றுக்காலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

வவுனியா - கணேசபுரத்தைச் சேர்ந்த பத்துப்பிள்ளைகளின் தந்தையாரான செல்லத்துரை யோகானந்தராசா (வயது 45) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். நேற்றுக்காலை 8.45 மணியளவில் மன்னார் வீதியிலுள்ள பட்டைக்காடு என்ற இடத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தமது தந்தையாரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்றுகொண்டிருந்த போது - இவர் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். 9 மில்லி மீற்றர் கைத்துப்பாக்கியால் இவர் மீது மூன்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டூரில் தமிழ் இளைஞர்...!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு- மண்டூரில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் 23 வயதான இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

மரணமான இளைஞர் கட்டடத் தொழிலாளியான மாலை சூரன் விமலேஸ்வரன் என இனம் காணப்பட்டுள்ளார்.

மரணமானவரின் சடலம் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

# 'விடுதலைப் பேரொளி' பிரான்ஸில் வெளியீடு!

பாரிஸ்

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் வாழ்வியல் குறிப்புக்கள் சாதனைகளை எதிர்கொண்ட சோதனைகளை வெளிப்படுத்தி நிற்கும் 'விடுதலைப் பேரொளி' ஆவண நூல் பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் வெளியிடப்பட்டது.

ஈழமுரசு பத்திரிகை நிறுவனத்தால் அச்சிடப்பட்ட இந்த நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் மாணி நாகேஸ் தலைமையில் இடம்பெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் (12 ஆம் பக்கம் பார்க்க)



# வவுனியா பிரகடனத்தை அங்கீகரிக்குமாறு அவுஸ்ரேலியாவிலும் ஒன்றுகூடல் நிகழ்வு!

சிட்னி

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை, தமிழீழ தேசத்தின் இறைமை ஆகியவற்றை சர்வதேசம் அங்கீகரிக்கக் கோரும் வவுனியா பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில், அவுஸ்ரேலியாவிலும் ஒன்றுகூடல் நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் ஒக்ரோபர் 2 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை றைட் சிவிக்சென்ரில் மாலை 6 மணி முதல் 9 மணிவரை இடம்பெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வு தொடர்பாக தென்துருவ தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் -

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றுக்கான எமது மக்களின் நீண்டகாலப் போராட்டம் இன்று ஒரு முக்கிய திருப்புமுனையில் உள்ளது.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் நடந்த சம்பவங்கள் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் அரசியல் தீர்வைக் காணும் ஆர்வம் சிங்கள ஆட்சியாளர்களுக்கு இல்லையென்பதைத் தெளிவாக்கியுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை கிரனேட் வீச்சு; இரு பொலிஸார் காயம்!

திருகோணமலை

திருகோணமலையில் நேற்று இருவேறு இராணுவக் காவலரண்கள் மீது இனந்தெரியாதோர் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் இரு பொலிஸார் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் திருகோண மலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - நேற்றிரவு 8.10 மணியளவில் திருகோணமலை - கண்டி வீதியில் காந்தி நகரிலுள்ள காவலரண் மீது கைக்குண்டு வீசப்பட்டபோதிலும் எந்தவித சேதமும் ஏற்படவில்லையெனத் தெரிவிக் கப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி, ஹெல உறுமய உடன்படிக்கையால்

# மஹிந்தவின் செல்வாக்கு வீழ்ச்சி!

கொழும்பு

ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டதையடுத்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் செல்வாக்கு 15 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக நெதர்லாந்தைத் தளமாகக் கொண்டியங்கும் ஆய்வு நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

பொதுமக்கள், ஊடகங்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஆகியோரிடம் நடத்திய ஆய்வின் அடிப்படையிலேயே இந்தத் தகவலை அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்னதாக 63 வீதமான மக்கள் இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்படுவார் என நம்பியிருந்தனர். எனினும், ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் அவர் தனது ஆதரவை இழந்து விட்டார்.

அத்துடன், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஜனாதிபதியும் கூட இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருகோணமலையில் நாளை ஹர்த்தால்!

திருகோணமலை

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தினரும் அவர்களுடன் இணைந்த ஆயுதக் குழுக்களும் நடத்திவரும் நிழல் யுத்தத்தைக் கண்டித்தும் அங்கு மேலதிகமாக நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை உடனடியாக வெளியேற்றுதல் உள்ளிட்ட 8 கோரிக்கைகளை முன் வைத்தும் நாளை புதன்கிழமை திருகோண மலையில் ஹர்த்தால் மற்றும் கதவடைப்பில் ஈடுபடுமாறு திருகோணமலை பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இராணுவம் கிழக்கில் ஆயுதக் குழுக்களுடன் இணைந்து விடுதலைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நாளாந்த கடமைகளை நிறுத்தி பொங்குதமிழில் பங்கேற்க அழைப்பு

வடமராட்சி—

தற்போது நடைமுறையிலுள்ள தமிழீழ அரசாங்கத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பான கூட்டம் அண்மையில் வடமராட்சியில் நடைபெற்றது.

பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ச.செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

யாழ். பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்துள்ள பொங்கு தமிழ் நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு தமிழீழ அரசை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என உரத்துக் குரல்கொடுக்கவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கோரிக்கை விடுத்தார்.

பொங்குதமிழ் நிகழ்வன்று அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும், பொது அமைப்புக்களும் தமது அன்றாட கருமங்களை நிறுத்தி பொங்குதமிழ் எழுச்சி நிழ்வில் பங்குபற்றுமாறு, வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ச.செந்தில்நாதன் அழைப்பு விடுத்தார். இந்த நிகழ்வில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாணவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (13)

# சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டுமென சர்வதேச சமூகத்திடம் உரத்துக் குரல் கொடுப்போம்

## – தென்மராட்சி பொங்குதமிழ் செயலணிக்குழு –

தென்மராட்சி—

தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு எதனையும் சிங்கள தேசம் தரும் நிலையில் இல்லாதவேளை- நாம் எமது சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகத்தை அங்கீகரிக்குமாறு பொங்குதமிழ் நிகழ்வில் அனைத்து தமிழ் மக்களும் ஒன்று திரண்டு உரத்துக் குரல் கொடுப்போம் என தென்மராட்சி பொங்குதமிழ் செயலணிக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வையொட்டி வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழ் மக்களாகிய நாம் எமது மரபு வழித் தாயகத்தில் எமக்கான சுயநிர்ணய உரிமையுடன் கௌரவமாக வாழவே விரும்புகிறோம். ஆனால், சிங்கள தேசமோ இதனை மறுத்து திட்டமிட்ட அழிப்புகள், அடக்குமுறைகள், கெடுபிடிகள் மூலம் எம்மக்களின் வாழ்வைச் சிதைத்து அடிமைகளாக்கி வைத்திருக்க விரும்புகிறது. எம்மக்களின் உயிர்களைப் பறித்து, உடமைகளை நாசமாக்கி வாழ்விடங்களிலிருந்து விரட்டி அகதிகளாக அல்லற்படும் துர்ப்பாக்கிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சமாதான வழியில் எம்மினத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தேசியத் தலைவரால் வழங்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பத்தையே சிங்கள தேசம் வழமைபோல் நிராகரித்துவிட்டது. யுத்த நிறுத்தம், சமாதானம் என்ற போர்வையில் சிங்கள அரசும், இராணுவமும் எம்மினத்தையும், விடுதலைப் போராட்டத்தையும் அழித்தொழிப்பதற்கான தீவிர நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

தமிழ் மக்களுக்கு சமஷ்டியும் இல்லை, இடைக்காலத் தன்னாட்சி அதிகார அலகும் இல்லை, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கான பொதுக் கட்டமைப்பும் இல்லை, தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு எதனையும் தரும் நிலையில் சிங்கள தேசம் இருந்ததில்லை, இருக்கப் போவதுமில்லை. சிங்கள தேசத்தின் உண்மை சொரூபம் மகிந்த ராஜபக்ச - ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் மூலம் மீண்டும் ஒருமுறை அரங்கேறியுள்ளது. இனிவரும் காலத்தில் சிங்கள தேசத்தால் தமிழ் மக்களுக்கு என்ன நடக்கப்போகிறது என்பதை அது கட்டியம் கூறி நிற்கின்றதல்லவா?

இந்த நிலையில் தமிழ் மக்களாகிய எமக்குள்ள தெரிவு தான் என்ன? நாம் செய்ய வேண்டியது என்ன? பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் தியாகத்தாலும், பொதுமக்களின் அர்ப்பணிப்புக்களாலும், போராளிகளின் உதிரத்தாலும், தீர்க்கதரிசனமான தலைமைத்துவத்தாலும் எமக்கென்றொரு நடைமுறை அரசை நாம் நிறுவியுள்ளோம். ஓர் அரசுக்கான முப்படைகள், காவல்துறை என்பவற்றுடன் பொருளாதார, சமூக, நிர்வாகக் கட்டமைப்புக்களைக் கொண்ட தமிழர் அரசு எமது தாயகத்தில் நடைமுறையிலுள்ளது.

இந்த நிலையில் வவுனியா தேசிய எழுச்சி மாநாட்டுப் பிரகடனத்தின் மூலம் எமது நீதியான போராட்டத்தையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்குமாறு சர்வதேசத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்தத் தேசிய எழுச்சிப் பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக தமிழர் தாயகத்தில் நடைபெற்று வரும் நிகழ்வுகளின் வரிசையில் மற்றொரு சிகரமாக குடாநாட்டு மக்களின் விருப்பால் எதிர்வரும் 30ஆம் திகதி பொங்கு தமிழ் எழுச்சிப் பிரகடன நிகழ்வு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

நாம் எல்லோரும் இந்த நிகழ்வில் தவறாது ஒன்று திரள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். இந்த வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற அன்றைய தினம் எமது வழமையான பணிகள் அனைத்தையும் ஒதுக்கிவைத்துவிட்டு ஒன்றுகூடி எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு சர்வதேசத்திடம் கோரிக்கை விடுப்பதன் மூலம் எமது இனத்தின் விடிவுக்கும், சந்ததியின் வாழ்வுக்கும் வழிசமைப்போம் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## விளையாட்டு உபகரணம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்—

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த மூன்று வருடங்களாக இயங்கிவரும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று காலை 11.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விளையாட்டுக் கழகத்தின் தலைவர் அல்லது செயலாளர் அல்லது உறுப்பினர் தவறாது சமுகம் தந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் - அன்றைய தினம் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படமாட் டாது என பிரதேச செயலர் முரளிதரன் தெரிவித்தார். (72)

## கலந்துரையாடல்

வடமராட்சி—

வடமராட்சி கோட்டத்தைச் சேர்ந்த தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை மாலை 5 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்கு அருகில் இயங்கும் வடமராட்சி பொங்கு தமிழ் தொடர்பகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்—

இந்த வருடம் டிசெம்பரில் தொழில்நுட்பக் கல்லூரியில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை மதிப்பீட்டு அலுவலரிடம் கையளிக்குமாறு கல்லூரியின் உப அதிபர் அலோசியஸ் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டும் அதற்கு முன்னரும் என்.சி.ரி. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான மீள் பரீட்சை 2005, 2006 இல் மட்டும் நடத்தப்படவிருப்பதால் இவ்விரு தடவைகளுக்குள் சித்தியடைய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வர்த்தக நிலையத்தில் திருட்டு!

கொக்குவில்—

ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்துக்குச் சமீபமாக அமைந்துள்ள விற்பனை நிலையத்தின் கூரை பிரித்து இரண்டாவது தடவையாகவும் திருடப்பட் டுள்ளது.

கடந்த புதன்கிழமை நள்ளிரவு கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த பால்மா வகைகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் பற்றரி போன்ற பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர்.

அத்துடன் ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டுள்ளது.

மேற்படி கடையில் ஆறு மாதங்களுக்கு முன்பாக 25 ஆயிரம் ரொக்கம் மற்றும் மளிகைப் பொருட்கள் திருடப்பட்டிருந்தது.

மொத்தம் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் - மேலும் தெரிவிக்கப்படுகிறது. (206)

## பொங்குதமிழ் ஏற்பாடு குறித்து பருத்தித்துறையில் இன்று கூட்டம்

பருத்தித்துறை—

பருத்தித்துறை பிரதேசத்திலுள்ள பொது அமைப்புக்களுக்கான பொங்கு தமிழ் ஏற்பாடு தொடர்பான கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு சுப்பர் மடம் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் டொன் பொஸ்கோ தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு - வடமராட்சி வடக்கு பிரதேசத்திலுள்ள விளையாட்டுக்கழகங்கள், கடற்தொழில் சங்கங்கள், மாதர் சங்கங்கள், விவசாய சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சரஸ்வதி கனகரட்ணம்

திருமதி சரஸ்வதி கனகரட்ணம் அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த செய்தியறிந்து மிகவும் மனவருத்தமடைகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு எமது இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக அர்ப்பணிக்கிறோம்.

G.S.லிங்கநாதன் அன் கோ ஸ்தாபனத்தாரும், ஊழியர்களும்.
பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(2066)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஷ் மற்றும் பலர் நடித்த
கிச்சா வயது 16
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று மட்டும்
ஜெயம் புகழ் ரவி, ரேணுகா மேனன் நடித்த
தாஸ்
நாளை முதல் ஜெய்ஆகாஷ், பிரணவி,நாசர், தாமு, வையாபுரி மற்றும் பலர்நடித்த
குருதேவா
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
ரவிகிருஷ்ணா, கோபிகா, பிரகாஷ்ராஜ், ரேவதி மற்றும் பலர் நடித்த
பொன்னியின் செல்வன்
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
2ஆவது ஜனத்திரள் வாரம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு -
நியூ புகழ் - எஸ்.ஜே.சூர்யா, நிலா

அன்பே ஆருயிரே
இசை - A.R. ரகுமான்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30


டிஜிற்றல் போட்டோ கொப்பி
$A_4$ - கறுப்பு வெள்ளை - 3.00 ரூபா
$A_4$ - கலர் - 40.00 ரூபா
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(த/4609)


## நமது ஈழநாடு

### மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை - இலக்கிய போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிகளுக்கான விதிகள்

**சிறுகதை மற்றும் கவிதைப்போட்டி**

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதை யாவும் தெளிவான எழுத்தில் எழுதப்பட்டோ தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் தட்டச்சில் 6 பக்கங்களுக்குள்ளும் இருப்பது நல்லது.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 50 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- இந்தப் போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி**

மேற் பிரிவு

தலைப்பு - தமிழ் மாணவர்களின் கல்வியும்... வெகுசனத் தொடர்பு ஊடகங்களும்.

மத்திய பிரிவு

தலைப்பு - தமிழ் மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும்

### நிபந்தனைகள்

- கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- கட்டுரைகள் ஆகக்குறைந்தது 1500 சொற்களுக்கு குறையாமலும் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.
- கட்டுரையை தேர்ந்தெடுப்பதில் நடுவர் குழுவினது தீர்ப்பே இறுதியானது.

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 25.09.2005

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரிகள்:

கலை இலக்கிய கட்டுரைப்போட்டி
"நமது ஈழநாடு"
267 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு பணிமனை
யாழ்.சாலை
கிளிநொச்சி.

# ஐரோப்பிய யூனியனின் நிராகரிப்பு; இலங்கை அரசுக்குப் பின்னடைவு!

கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை ஐரோப்பிய ஒன்றியம் நிராகரித்துள்ளமை, இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பின்னடைவு என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச அழுத்தத்தை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கை அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு அம்சமாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதற்குரிய அழுத்தங்களை இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் வழங்கவேண்டும் என்றும் இலங்கை அரசாங்கம் கேட்டிருந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்குத் தலைமை வகிக்கும் பிரித்தானியா விடுதலைப் புலிகளைத் தான் தடைசெய்துள்ளது போல், ஏனைய நாடுகளும் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யவேண்டும். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடம் வலியுறுத்த வேண்டும் என்றும் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய தீவிர பிரசாரங்களில் காணப்பட்ட உள்நோக்கத்தைச் சரிவரப் புரிந்துகொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், விடுதலைப் புலிகளைத் தடைசெய்யப்போவதில்லை என்று அறிவித்தது.

இதேவேளை, அடுத்தவார நடுப்பகுதியில் இது தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ முடிவு அறிவிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது. (01)

## சிறுவர் பாதுகாப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம் —

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு கூட்டம் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது.

## ஜப்பான், மலேசியா, இந்தோனேஷியாவில்

# விமான நிலையத்தில் வைத்தே அனுப்பப்படும் இலங்கையர்கள்!

கொழும்பு —

ஜப்பான், மலேசியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்கள், அங்குள்ள விமானநிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பப்படும் சம்பவங்கள் அதிகரித்துவருவதாக கட்டுநாயக்க சர்வதேச விமானநிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையர்கள் மீது நம்பிக்கை இழந்த நிலையிலேயே இவ்வாறான நடவடிக்கைகளை இந்த நாடுகள் எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சட்டரீதியாக மேற்படி நாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களும் இவ்வாறு விமானநிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று மாதங்களாக சட்டரீதியாகச் சென்ற 200 இற்கும் அதிகமான இலங்கையர்கள், குறிப்பிட்ட நாடுகளின் விமானநிலையங்களில் வைத்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். ஜப்பான் நாட்டுக்குச் சென்றவர்களே இவர்களில் அதிகமாகத் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் என்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய குற்றப்புலனாய்வுத் திணைக்களக் கிளையின் அதிகாரிகள் தெரிவித்தனர். (01)

# ரணிலுடனான நேரடி விவாதத்துக்கான அழைப்பை நிராகரித்தார் மகிந்த ராஜபக்ஷ





கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடி விவாதம் நடத்த விடுக்கப்பட்ட அழைப்பை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

'சிரச' தொலைக்காட்சி நிர்வாகம் இரு வேட்பாளர்களின் விவாதங்களையும் 3 பிரிவாக நேரடி ஒளிபரப்பு செய்யத் திட்டமிட்டிருந்தது.

இது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்காவுக்கும், மகிந்த ராஜபக்ஷவுக்கும் முறைப்படியான கடிதத்தை தொலைக்காட்சி நிறுவனம் அனுப்பிவைத்தது. இந்த விவாதத்தில் பங்கேற்கத் தயாரென ரணில் விக்கிரமசிங்க, சிரச தொலைக்கட்சி நிறுவனத்துக்கு பதில் அனுப்பினார்.

ஆனால், மகிந்த ராஜபக்ஷ இந்த அழைப்பை நிராகரித்து விட்டார்.

சுதந்திரக்கட்சியில் ஏற்பட்டுள்ள உள்முரண்கள், ரணில் விக்கிரமசிங்காவின் தொலைநோக்கான பொருளாதார, சமூக செயற்திட்டங்கள் ஆகியவற்றைத் தன்னால் எதிர்கொள்ள இயலாத நிலையிலேயே மகிந்த ராஜபக்ஷ இந்த முடிவை மேற்கொண்டதாக கூறப்படுகிறது.

எனினும் இது குறித்து கருத்துத் தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ வட்டாரங்கள், அமெரிக்கா போன்ற நாடுகளில் நடத்தப்படும் இது போன்ற நேரடி விவாதங்களை மகிந்த ராஜபக்ஷ தற்போது கவனித்து வருகிறார். விவாதங்களுக்கு தன்னைத் தயார்ப்படுத்தி வருகிறார். விரைவில் ரணிலுடன் விவாதத்துக்கு வருவார் என்று தெரிவித்தன.

# மஹிந்தவுக்கு ஆதரவாக ஆயிரம் பிரசார கூட்டங்கள்

கொழும்பு —

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ஆயிரம் பிரசார கூட்டங்களை நடத்த ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

இந்தக் கூட்டங்கள் நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள முக்கிய பௌத்த விகாரைகளில் நடைபெறவுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் திகதி தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டவுடன் இந்தக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக ஜாதிகஹெல உறுமயவின் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்தார். (01)

# அனுராவின் ஊடகச்செயலாளர் பதவியிலிருந்து நீக்கம்!

கொழும்பு —

வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவின் ஊடகச் செயலாளர் குமாரதாஸ கிரியாவ பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தொடர்பாக நியூயோர்க்கில் இருந்து அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை ஊடகங்களுக்கு தவறான முறையில் வழங்கப்பட்டது தொடர்பாகவே இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மகிந்தவைப் பாதுகாப்பதற்கு சிரேஷ்ட தலைவர்கள் முயற்சி

கொழும்பு —

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பதவியிலிருந்து விலக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையிலிருந்து அவரை மீட்டெடுக்கும் வகையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் குழுவொன்று ஈடுபடவுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இது குறித்து சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் பலர் கலந்துரையாடல்களை நடத்தி உறுதியான தீர்மானமொன்றுக்கு வந்துள்ளனர்.

வெளிநாட்டிலுள்ள ஜனாதிபதி நாடு திரும்பியவுடன், தமது தீர்மானம் குறித்து அவருக்கு தெரியப்படுத்தவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

அத்துடன், மகிந்த ராஜபக்ஷவை பாதுகாக்கும் வகையில் கிராம மட்டத்தில் ஆதரவாளர்களை தயார் படுத்தலில் ஈடுபடவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர். (தே)

## சுதந்திரக்கட்சி பிரசாரம் இன்று ஆரம்பம்!

கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் இன்று கொழும்பு நகர சபை மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தரும் ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி மற்றும் ஏனைய பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதிநிதிகள் உரையாற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

# ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியதும் ஐ.நா பணிகளில் சந்திரிகா குமாரதுங்க?

## அரசியல் வட்டாரங்களில் சந்தேகம்



கொழும்பு —

ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்றதும் ஐக்கிய நாடுகள் சபை தொடர்பான பணிகளில் சந்திரிகா குமாரதுங்க தன்னை இணைத்துக்கொள்ளக்கூடும் என அரசியல் வட்டாரங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ.நா 60 ஆம் ஆண்டு கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய சந்திகா குமாரதுங்கவின் செயற்பாடுகள் இவற்றை வெளிப்படுத்தும் வகையில் இருப்பதாக செய்திகள் தெரிவித்தன.

ஐ.நா அதிகாரிகளுடனான நெருங்கிய நிதானமாக உறவு பாராட்டலை இம்முறை ஜனாதிபதி சந்திரிகா வெளிப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய சமூகத்தினர் கூட்டத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த சந்திரிகா, தனது ஓய்வு காலத்தில் இனப் பிரச்சினை உள்ள நாடுகளில் தீர்வு காண்பதற்கு என் அனுபவத்தை பகிர்ந்து கொள்வேன் என்று கூறினார்.

சந்திரிகாவின் இந்தப் பேச்சுகளும், செயற்பாடுகளும் ஐ.நா செயலர் கொபி அனானுக்கு ஒரு செய்தியைத் தெரிவித்திருக்கும் என்று சந்திரிகா கருதுகிறார். அதாவது ஓய்வு காலத்திற்குப் பின் ஐ.நா சபையின் விசேட தூதுவர் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவே சந்திரிகா விரும்புகிறார் என்பதுதான் அது எனவும் அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டனர்.

வழமையாக நியூயோர்க் செல்லும் சந்திரிகா குமாரதுங்க, ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசுவார். ஆனால், இம்முறை ஊடகவியலாளர் சந்திப்பை தவிர்த்துவிட்டார்.

உடல்நிலையில் அரசியல் நிலைமைகளும் இதற்கு காரணம் என்று பிரதிநிதிகள் தரப்பில் கூறப்பட்டது.

பி.பி.சி மற்றும் சி.என்.என் தொலைக்காட்சிகளுக்கு பேட்டி அளிப்பதாக முதலில் ஒப்புக் கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - அதையும் கடைசி நிமிடங்களில் மறுத்து விட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உள்முரண்பாடுகளை எதிர்கொள்ள இயலாத நிலையிலேயே சந்திரிகா இந்த நேர்காணல்களை ரத்துச் செய்ததாகக் கூறப்படுகிறது.

## வடக்கு - கிழக்கிலுள்ள

# வேலையற்ற இளைஞர்களுக்கென விசேட தொழிற்பயிற்சி வசதி!

கொழும்பு —

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள வேலையற்ற இளைஞர்களுக்காக 180 மில்லியன் ரூபா செலவில் தொழிற் பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

மனிதவள அபிவிருத்தி, தொழில் பயிற்சி, தொழில்நுட்பக் கல்வி அமைச்சு வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் இந்த தொழிற் பயிற்சி நெறிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதற்கென ஜனாதிபதி நிதியத்தில் இருந்து 180 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறுகிய காலத்தைக் கொண்டதாக இந்தத் தொழிற்பயிற்சி நெறிகள் இடம்பெறும்.

பயிற்சிக் காலத்தின் போது பயிற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 100 ரூபா வீதம் விசேட கொடுப்பனவும், போக்குவரத்துக்கான பருவ காலச்சீட்டும் அரசாங்கத்தால் வழங்கப்படும்.

தொழிற்பயிற்சி முடிவில் எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சைகளை நடத்தி தொழில் பயிற்சி அதிகார சபையே சான்றிதழ்களை வழங்கும்.

மாவட்ட அரச அதிபர்களின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும் இந்த தொழிற்பயிற்சி நெறிகளில் - திட்டங்கள் தொழிற் பயிற்சி அதிகார சபை, வடக்கு-கிழக்கு தொழில்துறை திணைக் களம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், தேசிய தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி அதிகார சபை மற்றும் இலங்கை அரச சார்பற்ற நிறுவனங்கள் அங்கம் வகிக்கும் என்றும் தெரியவருகிறது.

# கங்கூலி - சப்பல் மோதல் குறித்து ஆறு பேர் கொண்ட குழு விசாரணை!





புதுடெல்கி —

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் கங்கூலிக்கும், பயிற்சியாளர் கிரேக் சப்பலுக்குமிடையே மோதல் குறித்து கவாஸ்கர், ரவிசாஸ்திரி உள்ளிட்ட 6 பேர் கொண்ட குழு விசாரணை நடத்தவுள்ளது.

சமீபத்தில் இந்திய கப்டன் கங்கூலியை பதவி விலகும்படி பயிற்சியாளர் கிரேக் சப்பல் வற்புறுத்தினார் என்ற செய்தி வெளியானது. இந்தத் தகவலை கங்கூலிதான் வெளியிட்டார். அவர் கிரேக் சப்பலின் பெயரை நிருபர்களிடம் சொல்லவில்லை என்றாலும், தன்னை பதவி விலகச் சொன்னவர் அவர்தான் என்பதை மறைமுகமாகக் குறிப்பிட்டார்.

இதையடுத்து கிரேக் சப்பலும் தன் தரப்பு நியாயத்தை பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். இப்படி ஒரு அணியின் கப்டன், பயிற்சியாளர் இருவருக்குமிடையே மோதல் வலுப்பெற்றுக் கொண்டே போவது அணியின் நலனுக்கு உகந்ததல்ல என்று இந்திய கிரிக்கெட சபை கருதியது.

எனவே கங்கூலி, சப்பல் இருவரும் இது பற்றி இனிமேல் எதுவும் பேசக் கூடாது என்று கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர்சிங் மகேந்திரா தடை விதித்தார்.

இந்தநிலையில்- கங்கூலி, சப்பல் இடையே ஏற்பட்டுள்ள மோதல் பற்றி மும்பையில் எதிர்வரும் 27ஆம் திகதி கிரிக்கெட் சபை ஆய்வுக்குழு விசாரணை நடத்த இருக்கிறது. இந்தத் தகவலை நேற்றுமுன்தினம் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர்சிங் டெல்கியில் நிருபர்களிடம் தெரிவித்தார். இந்த ஆய்வுக் குழுவில் ரன்பீர்சிங், ஜக்மோகன் டால்மியா, எஸ்.கே. நாயர், முன்னாள் கப்டன்கள் கவாஸ்கர், ரவி சாஸ்திரி, வெங்கட் ராகவன் ஆகியோர் உள்ளனர்.

இந்த ஆய்வுக் குழு கூட்டத்தில் இந்திய அணியின் முகாமையாளர் அமிதாப் சௌத்ரி கொடுக்க உள்ள அறிக்கையையும் வைத்து ஆய்வு நடத்தப்படும். அதன் பின்பு இந்த விவகாரத்தில் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி கிரிக்கெட் சபை முடிவு செய்யும் என்று ரன்பீர்சிங் தெரிவித்தார்.



## உதைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம் —

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு இளம் தென்றல் விளையாட்டுக் கழக அணியும்,

5.00 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்தி அணியும் மோதவுள்ளன.

விளையாட்டு

## கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி

புத்தூர் —

கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று இரவு 7 மணியளவில் கழகத் தலைவர் கு.மகாதேவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் செற்றப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும், ஓவர்கேம் முறையிலான 6 நபர் கொண்ட போட்டியில் சிவகுமாரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும், 4 பேர் கொண்ட போட்டியில் குணசேகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவகுமாரன் அணியும் மோதவுள்ளன. (12)

## 'பரா' கிண்ண கிரிக்கெட் போட்டி; நொதேண் அணி சம்பியனானது!





யாழ்ப்பாணம் —

நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்திய பரா வெற்றிக் கிண்ணத்திற்கான 12 ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.30 மணிக்கு செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் நொதேண் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நொதேண் விளையாட்டுக்கழக அணி- 11 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சகிலேஸ்வரன் 11, பந்துலன் 8 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் உடுவில் மத்திய விளையாட்டுக்கழகம் சார்பாக கிங்ஸ்லி 3 விக்கெட்டுக்களையும், ஐங்கரன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உடுவில் மத்திய விளையாட்டுக்கழக அணி 10 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 44 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால், நொதேண் விளையாட்டுக்கழக அணி 9 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

உடுவில் அணி சார்பாக கிசோ 11, ரோய் 8 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் நாதன், உமேஸ், பந்துலன் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்துக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன் வீரர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவித்தார்.

## பிளின்ரொப்பும் பீற்றர்சனும் அபாயகரமானவர்களாம்!

### யுனுஸ்கான் சொல்கிறார்

கராச்சி —

இங்கிலாந்து வீரர்கள் பிளின்ரொப், கெவின் பீற்றர்சன் ஆகியோர் அபாயகரமானவர்கள் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் துணைக் கப்டன் யுனுஸ் கான் தெரிவித்தார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் (ஒக்ரோபர்) பாகிஸ்தானில் பயணம் செய்து விளையாடவுள்ளது. இது குறித்து பாகிஸ்தான் அணியின் துணைக் கப்டன் யுனுஸ் கான் நிருபர்களிடம் கூறியதாவது -

இங்கிலாந்து அணி வீரர்கள் பிளின்ரொப்பும் கெவின் பீற்றர்சனும் அணியை வெற்றிபெறவைக்கும் அளவுக்கு திறமை படைத்தவர்கள். ஆட்டத்தின் முடிவை மாற்றியமைக்கும் சக்தி படைத்த இவர்கள், அபாயகரமானவர்களும் ஆவார்கள்.



அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரில் அவர்கள் இருவரும் அப்படித்தான் செய்தனர். இங்கிலாந்து கிரிக்கெட் சபை நிர்வாகம் சிறப்பாக உள்ளதென அவர் தெரிவித்தார்.

## டயமன்ஸ் அணியைத் தோற்கடித்து பொமேர்ஸ் அணி இறுதிப்போட்டிக்கு



நிரோஜன்

பருத்தித்துறை —

ஜனசக்தி சுழல் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பொமேர்ஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் பொமேர்ஸ் அணியை எதிர்த்து டயமன்ஸ் அணி மோதியது.

ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்திலேயே தமது வெற்றியை உறுதிசெய்யும் நோக்குடன் பொமேர்ஸ் அணி வீரர் நிரோஜன் டயமன்ஸ் அணியின் பின்னணி வீரர்களைக் கடந்து மிகச் சிறப்பான கோல் ஒன்றைப் போட்டார்.

அதைத் தொடர்ந்து 19ஆவது நிமிடத்தில் பொமேர்ஸ் அணியைச் சேர்ந்த இடதுபக்க முன்னணி வீரர் பாக்கியநாதன் தட்டிக் கொடுத்த பந்தை அதேயணியைச் சேர்ந்த நிரோஜன் கோலாக்கினார். இதனால், இடைவேளைக்கு முன்னர் 2:0 என்ற கோல் கணக்கில் பொமேர்ஸ் அணியினர் முன்னிலை பெற்றனர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கி முதலாவது நிமிடத்திலேயே டயமன்ஸ் அணி வீரர்கள் பந்தைக் கொண்டு சென்று கோலடிக்கத் தவறிவிட்டனர். இதனால் அந்த வாய்ப்பும் கைநழுவிப் போனது.

7ஆவது நிமிடத்தில் பொமேர்ஸ் அணி வீரர் தண்டனைப் பிரதேசத்துக்குள் வைத்து பந்தைக் கையால் பிடித்தமையால், டயமன்ஸ் அணிக்கு தண்டனை உதை வழங்கப்பட்டது. இதனை அவ்வணி வீரர் அரவிந்தன் மிகச் சிறப்பாக கோலாக்கினார்.

இதன்பின்னர், ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது. 16ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் பிரியங்கன் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பியது. இரு அணிகளும் மிகச் சிறப்பாக விளையாடிய போதும், பொமேர்ஸ் அணியின் பின்னணி வீரர்கள் மிகச் சிறப்பாக டயமன்ஸ் அணி வீரர்கள் கோலடிப்பதைத் தடுத்தாடிக் கொண்டிருந்தனர்.

25ஆவது நிமிடத்தில் பொமேர்ஸ் அணி வீரர் நிரோஜன் அடித்த பந்து வெளியால் செல்கிறது என, டயமன்ஸ் கோல் காப்பாளர் எதிர்பார்த்த போதும், அப்பந்து நிலத்தில் வீழ்ந்து சறுக்கி கோல் கம்பத்ினுள் புகுந்து கொண்டது.

அதன் பின்னர் விதிக்கு முரணான வகையில் விளையாடியமைக்காக டயமன்ஸ் அணி வீரர் ஒருவருக்கு மஞ்சள் அட்டையும் காட்டப்பட்டது. இறுதியில் பொமேர்ஸ் அணி, டயமன்ஸ் அணியை 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டு இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

இதில் 3 கோல்களைப் போட்ட பொமேர்ஸ் அணி வீரர் நிரோஜன் ஆட்ட நாயகனாகவும் தெரிவானார். (12)

## சனத் ஜெயசூர்ய பங்கேற்கும் 100 ஆவது டெஸ்ட் இன்று!



கொழும்பு —

இலங்கை-பங்களாதேஷ் அணிகளிடையே இன்று ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஜெயசூர்ய 100ஆவது டெஸ்டில் களமிறங்குகிறார்.

1991ஆம் ஆண்டு இலங்கை அணிக்காக கிரிக்கெட் விளையாடத் தொடங்கிய ஜெயசூர்ய, கடந்த 14 ஆண்டுகளில் பல சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார். இப்போது 100ஆவது டெஸ்டில் அவர் விளையாடுவது ஒரு புதிய சாதனையாகும்.

இது பற்றி ஜெயசூர்ய கூறுகையில் - இவ்வளவு விரைவில் நான் 100ஆவது டெஸ்டில் விளையாடுவது எனக்கு ஏதோ கனவு மாதிரி இருக்கிறது. அளவில்லாத மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் உள்ளதென்று குறிப்பிட்டார்.

## தோல்பந்து கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம் —

கல்வித் திணைக்களம் நடத்தும் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தோல்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரியும்,

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியும் மோதவுள்ளன.

## டேவன் போர்ட் சம்பியன்



பாலி —

விஸ்மிலாக் சர்வதேச ரெனிஸ் போட்டி இந்தோனேஷியாவில் உள்ள பாலியில் நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் உலகின் 2ஆம் நிலை வீராங்கனையான டேவன் போர்ட் (அமெரிக்கா), இத்தாலியின் பிரான்செஸ்காவுடன் மோதினார்.

இதில் டேவன் போர்ட் 6-2, 6-4 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

# பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொள்ளவேண்டியது ஒவ்வொரு தமிழ் மக்களினதும் கடமையாகும் !

## மாவை.சேனாதிராஜா எம்.பி



யாழ்ப்பாணம் —

ஜனநாயகம், சமாதானப் பற்றுக் கருத்து எனக் கூறிக்கொண்டு - சமூதாயத்தையும், எமது இனத்தையும் காட்டிக்கொடுத்துக் கொண்டு இருப்பவர்களை முளையிலேயே அழித்துவிட வேண்டும் என மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

எதிர்வரும் 30ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில்நடைபெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சிப்பிரகடன நிகழ்வு தொடர்பாக, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்அங்கு மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்து, போராட்டம் செய்து காலம் காலமாகச் சிங்கள பௌத்த பேரினவாத சக்தியால் ஒதுக்கப்பட்ட சமூகமாகவே இருந்து வந்துள்ளனர். காலப் போக்கில் தமிழ்மக்களுடைய போராட்டம் ஆயுதப் போராட்டமாகமாறியதன் விளைவாக தமிழரின் இராணுவரீதியான வெற்றிகளைக் கண்டு களைத்துப் போன சிங்கள தேசம் - புலிகளை இராணுவ ரீதியான போராட்டத்தின் மூலம் வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்து, சமாதானம் என்ற போர்வையில் புலிகளுடைய இராணுவப் பலத்தைக் குறைப்பதற்கும், தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்குமான செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற சிங்கள தேசத்தின் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிகழ்வாகவே இந்தப் பொங்குதமிழ் எழுச்சிப் பிரகடன நிகழ்வு அமைகிறது.

இந்த எழுச்சிப்போராட்டத்தின் விளைவை சிங்கள தேசம் அறிந்து கொள்ளவேண்டும்.

சிங்கள பேரினவாதம் எமது மக்களையும், போராட்டத்தையும் அடக்கி, ஒடுக்கி ஆயுதப் போராட்டத்தை மழுங்கடிப்பதற்கும், பிளவுகளை ஏற்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை செய்து கொண்டு வருகின்றது. சிங்கள பேரினவாதிகளின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்து, காட்டிக் கொடுப்பவர்களையும் கலாசாரச் சீரழிவுகளுக்கு வழிகோலுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களையும் அடியோடு அழித்து விட வேண்டும்.

தமிழ்பேசும் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தி படைத்தவர்கள் புலிகள் என்பதில் எந்த விதமாற்றமும் இல்லை. தமிழ் மக்கள் தமது தாயகப் பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமையோடு சுதந்திரமாக வாழவேண்டும் என்றால், தற்போது நடைமுறையில் இருக்கின்ற தமிழீழதேசிய அரசை, சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற பொங்கு தமிழ் எழுச்சிப் பிரகடனத்தில் ஒவ்வொரு தமிழ் மகனும் பங்கு கொள்ளவேண்டியது கடமையும், பொறுப்புமாகும். எமது மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக பதினொண்ணாயிரம் வரையிலான மாவீரர்ள் செய்த தியாகத்தின் அடிப்படையில் உருவான அடிததளம் எமது எதிர்கால சமூகத்துக்கு ஆதாரமாகவுள்ளது.

நாம் சுதந்திமாக வாழவேண்டும் என்பதற்காக தமது உயிர்களைக் கொடையாக விட்டுச் சென்றுள்ள மாவீர்களது கனவு நனவாக வேண்டுமென்றால் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். பொங்குதமிழ் எழுச்சிப் பிரகடன நிகழ்வில் குடாநாட்டில் உள்ள 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு, சர்வதேசத்துக்கு எமது கோரிக்கையை வெளிப்படுத்துவதன் மூலம் சர்வதேச சமூகம், தமிழீழ தேசிய அரசை ஆங்கீகரிக்கச் செய்யலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு
# பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை சிரமதானம்

மானிப்பாய் —

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பல பயன்தரு வேலைத் திட்டங்களைச் செய்துவரும் ஒழுங்கில் அண்மையில் வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் செயலாளர் எம்.ஜே. சாந்தசீலன் தலைமையில் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை வளவு துப்பரவு செய்யப்பட்டது.

சிரமதானப் பணியில் மானிப்பாய் பிரதேசசபை தலைமை அலுவலகம் ,ஆனைக்கோட்டை உப அலுவலகம், பண்டத்தரிப்பு மற்றும் மாதகல் உப அலுவலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் பங்கேற்றனர்.

இதேவேளை, நவாலி வெள்ள வாய்க்கால் பகுதியும் பிரதேச சபை ஊழியர்களால் துப்பரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (100)

### யாழ்.வலய பாடசாலைகள் மூலம்
# பிளாஸ்ரிக் போத்தல்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் திண்மக் கழிவானது தற்போது முக்கிய பிரச்சினையாக உள்ளதால், அவற்றை அழிப்பதற்கான ஒரு நடவடிக்கையாக யாழ்.வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகள் மூலம் பிளாஸ்டிக் வெற்றுப் போத்தல்கள் மீள சேகரிக்கப்பட உள்ளன.

இது தொடர்பாக யாழ்வலயப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் பின்வரும் விடயங்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் திண்மக் கழிவானது - தற்போது முக்கிய பிரச்சினையாக உள்ளது. பொலித்தீன் பைகள், போத்தல்கள் போன்ற பிளாஸ்டிக் பொருட்களே அதிகம் காணப்படுகின்றன. இந்தப் பொருட்கள் இயற்கையில் உக்காத தன்மை கொண்டவை. இவற்றால் மண் பாதிக்கப்படுவதுடன், இவற்றை எரிக்கும் போது உருவாகும் நச்சு வாயுக்கள் எமக்கும், ஏனைய உயிர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இந்தப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்கு மீளப் பயன்படுத்தல் சிறந்ததாகும். எனவே பாடசாலைகளிலும், சுற்றாடலிலும்காணப் படுகின்ற இந்தப் பொருட்களை பாடசாலையில் இயங்கும் சிறுவர் சுற்றாடல் கழகம், சுற்றாடல் முன்னோடிப் படையணி போன்ற அமைப்புகள் மூலம் சேகரித்து பாடசாலைகளில் வைக்குமாறும், இதனை பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்கள் வந்து பெற்றுக் கொள்வார்கள் எனவும், கூடுதலாக சேகரிக்கும் பாடசாலைகள் மற்றும் கழகங்களுக்கு பதக்கங்கள்வழங்கப்படும் எனவும் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் சுற்றறிக்கை மூலம் தெரியப்படுத்தியுள்ளார். (58)

# சேதமடைந்த வீடுகளை நிர்மாணிக்க 80 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சுனாமித் தாக்கம் மற்றும் கடந்தகால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த வீடுகளை மீள்நிர்மாணம் செய்து கொடுப்பதற்கு உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதாக வடக்கு- கிழக்கு மாகாண வீடமைப்பு மீள் நிர்மாணப் பணிப்பாளர் எஸ்.பத்மநாதன் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சேதமடைந்த வீடுகளில் 31 ஆயிரம் வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்கு 80 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கி ஒதுக்கீடு செய்துள்ளது.

4 ஆண்டுகள் திட்டமாகக் கொண்ட இந்தத் திட்டப் பணிகள் 2008 ஆம் ஆண்டுக்குள் முடிவடையும். இந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் முற்றாக வீடுகளை இழந்தோருக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பகுதியளவில் வீடுகள் சேதமடைந்தோருக்கு 1 லட்சம் ரூபாவும் வழங்கப்படும்.

நிர்மாணிக்கப்படும் ஒவ்வொரு வீடும் அடிப்படை வசதிகள் கொண்ட 500 சதுர அடிகளைக் கொண்டதாக அமையும்.

இந்த வீடமைப்புத் திட்டத்தின்கீழ் பயன்பெறுபவர்களின் உடல் உழைப்பைக் கொண்டு கட்ட நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## சீரடி பாபாவின் பிறந்தநாள்

யாழ்ப்பாணம் —

யாழ்.பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் நாளை புதன் கிழமை தொடக்கம் 27 ஆம் திகதி வரை - காலை 9 முதல் நண்பகல் 12 மணிவரை சீரடி பாபாவின் சத்சரிதம் வாசிக்கப் படவுள்ளது.

27 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பாபாவின் பிறந்த நாளன்று பஜனை, ஹோமம் ஆகியவற்றுடன் நண்பகல் நாராயன சேவையும் இடம்பெறும்.

## 'இந்துவின் சதுரங்கன்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் —

யாழ்.இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்திய 10 ஆவது வருடாந்த சதுரங்க சுற்றுப் போட்டி பரிசளிப்பு நிகழ்வுடன் 'இந்துவின் சதுரங்கன்' தசாப்த மலர் வெளியீட்டு விழா எதிர் வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருபரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழா நிகழ்வில் - பிரதமவிருந்தினராக விவசாய பீட பீடாதிபதி சு.இராசதுரையும், பாரியாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## திருத்தப்படாத வடிகால் குழாய்

கொக்குவில் —

யாழ். சிறைச்சாலை அமைந்துள்ள ஐந்தாம் குறுக்கு வீதி மற்றும் சப்பல் வீதி ஆகியன இணையும் மையப்பகுதியில் வீதிக்குக் குறுக்கே அமைந்துள்ள வடிகால் குழாய் பலத்த சேதமடைந்துள்ளது.

சேதமடைந்து பல வருடக் கணக்காகியும், திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமையால் இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (206)

## இசைக் கருவிகள் வாங்க நிதி வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவர்களின் பாவனைக்கென பாண்ட் வாத்திய இசைக்கருவிகள் கொள்வனவுக்காக ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளர். இதன் மூலம் பாண்ட் வாத்திய இசைக்கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை இந்தப் பாடசாலையின் சுற்றுமதிலை - பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் கட்டிக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

# கரையோர சமுதாய அபிவிருத்தி அலுவலகம் யாழ்.செயலகத்தில் நேற்று திறந்துவைப்பு!

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தை - நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஷ் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இந்த அலுவலகம் யாழ்.செயலக பதிவாளர் கட்டடத்தின் 3 ஆவது மாடியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வடக்கு -கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் மூலம் யாழ். மாவட்டத்தில் கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

கரையோரப் பிரதேசங்களில் சுகாதாரம், கல்வி, போக்குவரத்து போன்ற அபிவிருத்தி நுண்கருத்திட்டங்களை சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகச் செயற்படுத்தும் என இந்த அரச அலுவலகத்தின் மாவட்ட பதில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

இந்த அலுவலகத்தால் யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை, மருதங்கேணிப் பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 10 கிராமங்களில் கரையோர அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் எனவும், அடுத்த வருடத்தில் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய கரையோரப் பிரதேசங் களிலும் இவ்வாறான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடமைப்பு மீள்கட்டுமான நடவடிக்கைகளை இலகுபடுத்தும் வகையில், சுனாமி வீடமைப்பு மீள்கட்டுமான அலகின் யாழ்.மாவட்ட அலுவலகம் (THRU) ஒன்றும் கடந்த வாரம் யாழ்.செயலகத்தில் திறந்த வைக்கப்பட்டுள்ளது. இதன் யாழ்.மாவட்ட முகாமையாளராகவும் திரு.செந்தில் நந்தனன் கடமையாற்றுகிறார்.




நல்லூர் உற்சவ காலத்தில் பணியாற்றவென இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.திணைக்களத்தால் அமைக்கப் பட்ட முதலுதவி நிலையத்தின் முன்னால் செஞ்சிலுவைத் தொண்டர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (111)




# அழகிப் போட்டிக்கு அம்மாவும் மகளும்

**40** வயது அம்மாவும், 17 வயது மகளும் ஓர் அழகுப் போட்டியில் பங்குபற்றுவது புதுமையாகத் தெரியவில்லையா?



புதுமையான இந்த நிகழ்வு உண்மையான நிகழ்வுதான். **Miss. Great Britain** என்று அழைக்கப்படும் வருடாந்த அழகுப் போட்டியில் அம்மாவும், மகளும் போட்டியிடுகிறார்கள் என்பது ஆச்சரியமான விடயந்தான்.

இந்த அழகிப் போட்டி - **Miss. Great Britain** என்று அழைக்கப்பட்டாலும், இந்தப் போட்டிக்கு வயதெல்லை இல்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அம்மா ஓர் அற்புத அழகி. இணையத்தில் இந்த அழகிப் போட்டி விளம்பரத்தைக் கண்டபோது, முதலில் அம்மைவைத் தான் நினைத்துக்கொண்டேன். எனவே அம்மாவையும் போட் டிக்கு விண்ணப்பிக்க வைத்தேன் என்கிறார் மகள் கிறேசிடா. மகளோடு மேடையில் ஒன்றாக நிற்கும் நாள் வரலாம். இதை நான் ஒரு போட்டியாக நினைக்கவில்லை. சந்தோஷமாக வரவேற்கிறேன் என்கிறார் தாய். முடிவு என்னவாக இருக்கப் போகிறது?

அம்மாவா? மகளா?

# சூழலைப் பாதிக்காத ஆலை



**கா**லநிலையை, சூழலைப் பாதிக்காத வகையில் நிலக்கரியிலிருந்து சக்தியைப் பெறும் சக்திநிலையம் ஒன்றை பிரிட்டனும், ஐரோப்பிய யூனியனும் இணைந்து சீனாவுக்கு வழங்கவுள்ளன. இதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்த சக்தி நிலையத்திலிருந்து வெளியாகும் காபனீரொட்சைட்டு, பாறையினுள் நிலத்தடியில் செலுத்தப்படும். இது அங்கு சேமித்து வைக்கப்பட்டு, வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும். இது தொடர்பான ஒப்பந்தம் குறித்து, ஐரோப்பிய யூனியன் விரைவில் அறிவிக்கவுள்ளது.

# இப்படியும் பணம் கொட்டுமா?



**25** வயதில் ஒருவருக்கு இப்படியும் பணம் கொட்டுமா? கேள்விகள் எழுந்தாலும் பணம் கோடி கோடியாகக் கொட்டுவதையல்லவா பார்க்க முடிகிறது. ரொனால்டினோ என்ற அற்புதமான பிரேசில் நாட்டு காற்பந்தாட்ட நட்சத்திர வீரரைப் பற்றித்தான் இங்கே சொல்ல வருகிறோம்.

உலகப் புகழ்பெற்ற பார்சலீனோ காற்பந்தாட்டக் கழகம், இவரை 5 வருட ஒப்பந்தத்தில் 2003 ஆம் ஆண்டு எடுத்தது. அப்பொழுது சம்மதிக்கப்பட்ட தொகை 17 மில்லியன் பவுண்ட்ஸ். 2004 ஆம் ஆண்டின் சிறந்த காற்பந்தாட்ட வீரராகத் தெரிவாகிய இவரின், ஒப்பந் தத்தை இதே கழகம், இப்பொழுது, மேலும் 2 வருடங்களுக்கு நீடித்துள்ளது.

அதாவது - 2010ஆம் ஆண்டு வரை இவர் இந்த ஸ்பானிய சாம்பியன் கழகத்துக்காக விளையாட வேண்டும். ஆனால் இந்தத் தடவை ஒப்பந்தத் தொகை மேலே எகிறிக் குதித்துள்ளது. தொகை எவ்வளவு தெரியுமா? ஆண்டுக்கு 85 மில்லியன் பவுண்ட்ஸ். பணம் பந்தாடப்படும் விந்தையைப் பார்த்தீர்களா? கைகளைக் கொண்டு தான் அநேக மானவர்கள் பெரிய அளவில் சம்பாதிக்கிறார்கள். இவருக்கு கால்கள் கைகொடுக்கின்றன.

# பூமியின் உட்புறம் வேகமாக சுழல்கிறது



**பூ**மியின் மேல் கோதை விட, அதன் உட்பகுதி (Core) மிகவேகமாக சுழல்வதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பூமியின் திண்ம உட்பகுதி பெரும்பாலும் இரும்பு மற்றும் நிக்கல் நிறைந்ததாகும். சுமார் 24 ஆயிரம் கிலோ மீற்றர் விட்டம் கொண்டதாகும். அதன் திரவ நிலையான உட்பகுதி 7 ஆயிரம் கிலோமீற்றர் விட்டமுடையது. இந்த உள் திண்மப்பகுதியே பூமியின் காந்தக் கவர்ச்சியை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

பூமியின் உட்பகுதி வேகமாக சுழல்வதாக 1996 காலப்பகுதியில் கூறப்பட்ட போதிலும், அது தொடர்பாகப் பல சர்ச்சைகளும், விவாதங்களும் நடைபெற்றன. எனினும் பின்னர் மீண்டும் நடந்த ஆய்வில் இது உண்மை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# தகவல்களை வழங்கும் அதி நவீன ரோபோ



**தோ**ழனாகவும், தொலைபேசித் தகவல்களையும் சேகரித்து, எஜமானுக்கு வழங்கக்கூடிய உதவியாளராகவும் வடிவமைக்கப்பட்டு, ஜப்பானில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள அதிநவீன ரோபோ, மிகவும் பிரபலமடைந்து வருகிறது.

சுறுசுறுப்புக்குப் பெயர் பெற்ற ஜப்பான் நாட்டவர்கள் - ரோபோக்களை வடிவமைப்பதில் உலகுக்கே முன்னோடியாகத் திகழ்ந்து வருகின்றனர். இந்த வகையில் கார் உற்பத்தியிலும், ரோபோக்களை வடிவமைப்பதிலும் முன்னணியில் இருக்கும் மிட்சுபிசி நிறுவனம் அதிநவீன ரோபோவை டோக்கியோவில் அறிமுகம் செய்துள்ளது.



ஒரு மீற்றர் உயரமுடைய இந்த ரோபோ - அதிகபட்சமாக 10 பேரை அடையாளம் கண்டு கொள்ளும் வகையிலும், அவர்களை பெயர் சொல்லி அழைக்கக்கூடிய திறன் படைத்ததாகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

வேலைக்குச் சென்றுவிட்டு, வீடு திரும்பும் தனது எஜமானையும், அவரது குடும்பத்தாரையும் கைகுலுக்கி வரவேற்கும் வகையி லும், இந்த ரோபோ வடிவமைக்கப்பட்டு ள்ளது. மேலும் வீட்டுத் தொலைபேசிக்கு வந்த அழைப்புகள், வந்திருக்கும் தகவல்கள் ஆகியவற்றை இந்த ரோபோ வாசித்துக் காண்பிப்பதால், இது ஜப்பானில் தற்போது மிகவும் பிரபலமடைந்து வருகிறது.

# குரங்கிலிருந்து மனிதன்



**சி**ம்பன்சிக் குரங்குகளில் செய்யப்பட்ட ஆய்வுகளில் இருந்து, மனிதனை தீர்மானிக்க உதவும் பரம்பரை அலகின் படிமம் **(Blue print)** ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதாக நேச்சர் சஞ்சிகை ஓர் கட்டுரை வெளியிட்டுள்ளது.



ஒவ்வொரு இனப்பிரிவையும் தீர்மானிக்கும் இந்த பரம்பரை அலகு குறித்து, மேலும் தொடர்ந்து ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகிறது.

சார்ள்ஸ் டார்வினின் கொள்கைப்படி, குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்பதை இந்த அலகுகள் உறுதிப்படுத்துவதாகவும், அண்மையில் கண்டெடுக்கப்பட்ட சிம்பன்ஸி மூதாதையின் புதைபடிமம் **(Fossil)** இதை மேலும் வலுவூட்டுவதாகவும் அந்தச் சஞ்சிகை கூறுகிறது.

# உருளும் தலைகள்

**99** தலைகள் சுடப்பட்டு தினமும் உருளுகின்றன. அதிர்ச்சியான செய்தியாக இல்லையா? இது எந்த நாட்டில் என்று கேட்கிறீர்களா? பிரேசில் நாட்டில்தான். ஆனால் ஓர் ஆறுதலான செய்தியாக, 13 வருடங்களில் முதற் தடவையாக, துப்பாக்கிகளைக் கொண்டு கொல்லப்படும் அளவு விகிதம், இங்கு வீழ்ச்சியைக் கண்டுள்ளது என்று கணிப்பீடுகள் மூலம் கண்டறிந்துள்ளார்கள். கடந்த ஆண்டுக்கான துப்பாக்கிச் சாவுகளின் தொகை 36,000 என்றும், இது 2003 ஆம் ஆண்டுக் கணக்குடன் ஒப்பிடும்போது 8 வீதத்தால் குறைந்துள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். துப்பாக்கிகளைக் கைவிடும்படி அரசு பிரசாரங்களை மேற்கொண்டதும், வீடுகளிலுள்ள துப்பாக்கிகளை விலைகொடுத்து வாங்கியதும்தான் இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என்று கருதப்படுகிறது.



உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லாதவாறு, பிரேசில் நாட்டில்தான், துப்பாக்கிச் சூடுகள் மூலம் அதிகமானவர்கள் கொல்லப் படுகிறார்களாம். கடந்த ஆண்டு கொல்லப்பட்டவர்கள் தொகை வீழ்ச்சி கண்டிருந்தாலும், தினசரி சூட்டுச் சம்பவங்களினால் 99 தலைகள் உருண்டுள்ளன என்பது அதிர்ச்சியூட்டும் செய்திதான்.

# பிரமாண்டமான அளவில் சவர்க்காரம் தயாரிப்பு

**தெ**ன்னாபிரிக்காவைச் சேர்ந்த பிரபல சவர்க்கார நிறுவனம் ஒன்று தயாரித்துள்ள பன்னிரெண்டரை தொன் நிறைகொண்ட மிகப் பெரிய சவர்க்காரக்கட்டி கின்னஸ் புத்ததகத்தில் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.




தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் பிரபல யூனிலிவர் குளியல் சவர்க்கார நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. பொது மக்களைக் கவரும் விதமாக, விதவிதமான சவர்க்காரங்களைத் தயாரித்து வரும் இந்த நிறுவனம் - கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறும் நோக்குடன், புதிய முயற்சியை மேற்கொண்டது. பன்னிரெண்டரை தொன்நிறை கொண்ட பிரம்மாண்டமான வேஸ்லின் சவர்க் காரத்தைத் தயாரித்து, பொது மக்களின் பார்வைக்காக வைத் துள்ளது. இந்தப் பிரம்மாண்டமான சவர்க்காரக் கட்டி - கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. இதன் மூலம் பொது மக்களிடம் சவர்க்காரங்களின் பயன்பாடு குறித்த விழிப்புனர் வையும் ஏற்படுத்த முடிவதாக யூனிலிவர் சவர்க்கார நிறுவனம் தெரிவித்துள்ளது.

# இசை மூலம் சிகிச்சை

**அ**மெரிக்காவைச் சேர்ந்த மனநல மருத்துவர் ஒருவர் - மூளையின் அதிர்வுகளை இசையாக மாற்றி, அதன் மூலம் நோயாளிகளுக்கு சிகிச்சையளித்து வருகிறார். இந்த இசையைக் கேட்டால், மனம் லேசாவதுடன், புத்துணர்வும் ஏற்படுவதாக நோயாளிகள் கூறுகின்றனர்.



இரவுகளில் தூக்கம் வராமல் தவிப்பதும் ஒருவிதமான மன நோயாகவே கருதப்படுகிறது. தேவையற்ற சிந்தனைகளும், வீண் குழப்பங்களுமே இந்த மனநோய்க்குக் காரணமென மனநல மருத்துவர்கள் கூறுகின்றனர்.

பெரும்பாலும் இந்த நோய்க்குட்பட்டவர்களுக்குத் தூக்க மாத்திரைகளே தீர்வாகும். இந்த நிலையில், அமெரிக்காவைச் சேர்ந்த கேலினா மிண்ட்லின் என்ற பெண் மருத்துவர், இந்த நோய்க்கு புதுவிதமான சிகிச்சை முறையைக் கண்டுபிடித்துள்ளார். அதன்படி, இரவில் தூக்கம் வராமல் தவிக்கும் நோயாளியின் மூளை அதிர்வுகள், ஒரு கணினியில் பதிவு செய்யப் படுகிறது. பின்னர் அந்த அதிர்வுகள் பியானோ இசையாக மாற்றப் படுகின்றன.

தன்னுடைய அதிர்வுகளை, இசைவடிவில் கேட்கும்போது, அந்த மூளை அமைதிப்படுவதாகவும், இதனால் அந்த நோயாளிக்கு உடன்டியாக தூக்கம் ஏற்படுவதாகவும் மருத்துவர் கேலினா கூறுகிறார். இதுதவிர, இதேமுறையில் மூளைக்குப் புத்துணர்ச்சி அளிப்பதற்கான இசை சிகிச்சையையும், அவர் நோயாளிகளுக்கு அளித்து வருகிறார்.

இந்த இசையைக் கேட்கும்போதெல்லாம் மனம் லேசாவதுடன், புத்துணர்ச்சியும் ஏற்படுவதாக நோயாளிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# விபத்துக்களை தடுக்கும் மோட்டார் சைக்கிள்

**ஜ**ப்பான் நாட்டின் பிரபல இருசக்கர வாகன தயாரிப்பு நிறுவனமான ஹோண்டா கம்பனி- விபத்து நேரிடும் போது அதிலிருந்து தப்பிக்கும் வகையிலான மோட்டார் சைக்கிளை அறிமுகப்படுத்தியுள்ளது.



இரு சக்கர வாகன தயாரிப்பில் பல்வேறு நிறுவனங்களுக்கிடையே நாளுக்கு நாள் போட்டி அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் இந்தப் போட்டியை சமாளிப்பதற்காகப் பிரபல ஹோண்டா நிறுவனம் புதிய வகை இருசக்கர வாகனம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. அதிவேகமாக மோட்டார் சைக்கிளில் செல்லும் போது, எதிர்பாராத விதமாக ஏதேனும் ஒன்றின் மீது மோதும் போது, அதிலிருந்து தப்பிப் பதற்காக வண்டியின் முன் புறத்தில் காற்று அடைந்த பை ஒன்றை வடிவமைத்துள்ளது. இதன்படி அந்த வாகனம் மற்றொரு வாகனத்தின் மீது மோதும் போது, ஓட்டுநருக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது என்பதை செயல்வடிவில் அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் செய்து காட்டினர். எதிர்காலத்தில் இதுபோன்ற காற்றடைத்த பைகளுடன் கூடிய இருசக்கர வாகனங்கள் உருவாக்கப்படும் என ஹோண்டா நிறுனத்தின் தலைமைப் பொறியாளர் தெரிவித்தார்.



# உடலை மறைக்கும் லட்சக்கணக்கான தேனீக்கள்



**கொ**லம்பியா நாட்டைச் சேர்ந்த ஒருவர், தனது உடலில் லட்சக்கணக்கான தேனீக்களை அமர வைத்துப் புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

சாதனை படைக்க வேண்டும் என்று விரும்பும் சிலர், அதற்காக நூதனமான முயற்சிகளை மேற்கொள்வதை நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். அந்த வரிசையில் கொலம்பியா நாட்டைச் சேர்ந்த மரீன் என்பவர் - தனது உடல் முழுவதும் லட்சக்கணக்கான தேனீக்களை அமரவைக்க திட்டமிட்டார்.

அதன் படி, ராணி தேனீயை அவரது கரத்தில் வைத்தவுடன் லட்சக்கணக்கான தேனீக்கள் உடல் முழுவதும் படர்ந்தன. சிறிது நேரத்தில் அவரது உடல் முழுவதையும் மறைக்கும் அளவுக்குத் தேனீக்கள் அமர்ந்தன.

மொத்தம் 9 லட்சம் தேனீக்களை அமரவைக்கத் திட்டமிட்டதாகவும், ஆனால் சுமார் 6 லட்சம் தேனீக்கள் மட்டுமே அமர்ந்ததாகவும் மரீன் பின்னர் தெரிவித்தார். தேனீக்கள் தனது உடலில் பலமுறை கடித்த போதிலும், புதிய உலக சாதனையை தாம் படைத்துள்ளதாக அவர் கூறினார். இந்த நிகழ்ச்சியை ஏராளமான சுற்றுலாப் பயணிகள் ஆர்வம் கலந்த அச்சத்துடன் கண்டுகளித்தனர்.

# 49 கிராம் எடையில் செல்போன்



**ந**வீன உலகத்தின் தவிர்க்க முடியாத பொருட்களில் ஒன்றாகச் செல்போன் உள்ளது. தற்போது செல்போன் களில் இணையத்தள இணைப்பு, கமரா, படக்காட்சி, தொலைக்காட்சி மற்றும் வானொலி எனப் பல்வேறு பயன்பாடுகள் விருப்பத்துக் கேற்றபடி இணைக்கப்படு கின்றன.

நுகர்வோரின் தேவைகளை நிறைவேற்றி, விற்பனையைப் பெருக்கிக் கொள்வதற்காகச் செல்போன் தயாரிப்பு நிறுவனங்கள், நாளுக்குநாள் புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி வருகின்றன. அந்தவகையில், தென் கொரியாவின் செல்போன் தயாரிப்பு நிறுவனம் ஒன்று - 49 கிராம் எடையுள்ள செல்போன் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. சிம் கார்ட் அளவுக்குக் காட்சியளிக்கும் இந்தச் செல்போன் - அமெரிக்கா, கனடா, பிரேசில், ஆர்ஜென்டினா உள்ளிட்ட 100 நாடு களில் விரைவில் விற் பனை செய்யப்படவுள் ளதாகத் தென்கொரிய நிறுவனம் தெரிவித்துள்ளது.

## போக்குவரத்து வசதி கோரி

# கேவில்பற்று மக்கள் நாளைமறுதினம் மருதங்கேணி சந்தியில் போராட்டம்!

வடமராட்சி கிழக்கு —

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் உள்ள கேவில்பற்று கிராம மக்கள் - போக்குவரத்து வசதிகளை ஒழுங்கமைத்து தருமாறு கோரி நாளை மறுதினம் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

யாழ். அரசாங்க செயலகத்திடம் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுவை அப்பிரதேச மக்கள் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில் -

இடப்பெயர்வுக்குள்ளான 600 மீனவர்கள் மற்றும் 200 குடும்பங்கள் கேவில்பற்று கிராமத்தில் வசித்துவருகிறோம்.

கேவில்பற்றிலிருந்து பிரதான வீதிக்குச் செல்ல ஒவ்வொரு நாளும் 4 கிலோமீற்றர் வரை நடந்து செல்ல வேண்டியுள்ளது. வாகன போக்குவரத்திற்கு ஏற்றதாகவும் இந்த வீதி இல்லை.

இந்த வீதியை திருத்தக்கோரி அரசு அதிகாரிகளுடன் பல முறை பேச்சும் நடத்தியுள்ளோம். வடமராட்சி கிழக்கு உள்ளூராட்சி சபையினர் இந்த வீதித் திருத்தத்துக்கு 4 மில்லியன் ரூபா தொகையைப் பெற்றுள்ளனர். ஆனாலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. போக்குவரத்து ஒழுங்கு இல்லாததால் பெரும் அவதிக்குள்ளாகிறோம்.

எங்களது கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால், நாளைமறுதினம் வியாழக்கிழமை மருதங்கேணி சந்தியிலும், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் முன்பாகவும் கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## போதிய வசதிகளின்றி இயங்கும் தொழில்நுட்ப நிலையங்கள்

கிளிநொச்சி —

புளியங்குளத்திலும், ஓமந்தையிலும் உலகவங்கியின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பநிலையங்கள் போதியளவு தொடர்பாடல் வசதிகள் இல்லாத நிலையில் - இயங்கிவருகின்றன என, வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி கவலை தெரிவித்துள்ளார்.

உலக வங்கியால் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையங்கள் பூரணவசதியுடன் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

புளியங்குளம், ஓமந்தை ஆகிய பகுதிகளில் உலக வங்கி ஒவ்வொரு நிலையத்துக்கும் 2 மில்லியன் ரூபா நிதியையும் தேவையான கணினி மற்றும் உபகரணங்களையும் வழங்கியிருக்கின்றபோதும், இந்தப் பகுதியில் தொலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இதனால் இந்த நிலையங்களின் முழுமையான பயன்பாட்டை மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

## காணாமற்போன படையினரின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் 25 ஆம் திகதி கிளிநொச்சி வரவுள்ளனர்

கிளிநொச்சி —

காணாமல் போன படையினரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினர் எதிர்வரும் 25 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வரவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்தம் நடைபெற்ற காலத்தின் போது காணாமற்போன படையினரில் சிலர் இன்னமும் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருப்பதாக நம்பும் இந்த அமைப்பினர், குறித்த படையினரைப் பார்க்க தமக்கு அனுமதி தரவேண்டும் எனக் கோருவதற்காகவே கிளிநொச்சி வரவுள்ளதாகத் தெரிவித்தனர்.

தமது கிளிநொச்சிப் பயணத்தின் போது தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்கவுள்ளதாக காணாமல் போன படையினரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் தலைவி விசாகா தர்மதாஸ தெரிவித்தார்.

## பிரதேச செயலகம் நெடுங்கேணியில்

வவுனியா —

வவுனியா வடக்கு பிரதேச செயலகம் இன்று முதல் நெடுங்கேணியில் இயங்கவுள்ளது.

யுத்தம் காரணமாக இதுவரை காலமும் இந்தச் செயலகம் வவுனியாவில் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

## இராமநாதபுரம் மகா வித்தியாலய உயர்தர பரீட்சை பெறுபேறுகள்

கிளிநொச்சி —

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயம் பெற்ற பெறுபேறுகள் வருமாறு -

**கலைப்பிரிவு**

செ.தர்சிகா 2ஏ,சி, ந.பத்மப்பிரியா 2ஏ,சி, சி.ஈஸ்வரன் பி,2சி, சி.அகிலா பி,2சி, த.குகாயினி ஏ,பி,சி, இ.சிந்துஜா 2பி,சி, மு.நித்தியா 2பி,சி, கு.தமிழ்ப் பிரியா 2பி,சி, இ.நிஷாந்தன் ஏ, பி,எஸ்.

**வர்த்தகப்பிரிவு**

வே.செந்துரன் ஏ,2பி, அ.விபீசன் 2பி,சி, சி.சர்மிலா ஏ,2சி, சி.சயேந்தினி 2பி,சி, செ.சோபனா பி,2சி. (இ)

## போருக்கான எழுச்சி மாநாடு இன்று கிளிநொச்சியில்!

கிளிநொச்சி —

தமிழ்த் தேசிய விடுதலைப் போருக்கான எழுச்சி மாநாடு - கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு, கிளிநொச்சி தேசிய எழுச்சி பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தேசிய எழுச்சிப் பேரவையின் போராளிகளும், மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அரசாங்கமும், தென்னிலங்கை அரசியல்வாதிகளும் தமிழ் பேசும் மக்கள் விடயத்தில் இனவாத நோக்குடன் செயற்பட்டு வருகின்றனர். தமிழ் மக்கள் மீது போர் தொடுப்பதற்கான ஆயத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், எமது உரிமைப் போராட்டத்தை நாமும் முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவேதான் தென்னிலங்கை அரசியல் சக்திகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இனவாத நடவடிக்கைகளுக்கான முடிவை எடுப்பதற்கான எழுச்சி மாநாடாகவே இது அமையும் என, கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

## கற்றல் உபகரண கண்காட்சி

வவுனியா —

வவுனியா தெற்கு வலய முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் ஏற்பாடு செய்துள்ள, முன்பள்ளிக் கல்வி கற்றல் உபகரண கண்காட்சி - இன்று காலை 9 மணிக்கு வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் வவுனியா தெற்கு கல்வி வலய முன்பள்ளி உதவிப்பணிப்பாளர் எஸ்.கணேசபாதம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வவுனியா சிங்கள பிரதேச செயலாளர் டி.எம்.ஆர்.பி. தஸநாயக்க, வவுனியா தமிழ்ப் பிரிவு பிரதேச செயலாளர் செல்வி. தவஈஸ்வரி ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக தமிழர் புனர்வாழ்வுக்கழக வவுனியா மாவட்டப் பணிப்பாளர் எஸ். திருஞானசம்பந்தமூர்த்தி, வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிப் பணிப்பாளர்களான ஜனாப் எம்.ஏ.எம்.கமால், யு.என்.சந்திரசேன, வவுனியா கோட்டக்கல்வி அதிகாரி வி.கணேசராசா வவுனியா சிங்களப்பிரிவு கோட்டக் கல்வி அதிகாரி வி.கே.ஜெயரட்ண ஆகியோரும் கலந்து கொண்டனர். (01)

## மீலாத் விழாவில் பிரதமர்

23 ஆவது தேசிய மீலாத் விழா செப்ரெம்பர் 30 மற்றும் ஒக்ரோபர் முதலாம் திகதிகளில் மன்னார், முசலி, வவுனியா குடுவத்தபுலவு ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதலாம் நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ கலந்துகொள்வதுடன், 2 ஆம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார்.

மீலாத் விழா தொடர்பான ஏற்பாடுகள் இரு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வன்னி மாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

## உதைபந்தாட்ட போட்டி

வவுனியா —

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வவுனியா நகரசபையால் நடத்தப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதி ஆட்டத்தில் பண்டாரிக்குளம் விபுலானந்த மகாவித்தியாலய அணி வெற்றிபெற்றுள்ளது.

இந்த அணி மூன்றுமுறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியை இறுதி ஆட்டத்தில் தோற்கடித்தது.

முன்னதாக நடைபெற்ற வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் வவுனியா சைவப் பிரகாச இந்து மகளிர் கல்லூரி வெற்றி பெற்றது.

## உணவு போசாக்கு திட்டம் தொடர்பான கருத்தரங்கு

கண்டாவளை —

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராமங்களில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் உணவு, போசாக்குத் திட்டம் தொடர்பான கருத்தரங்குகள் கிராமங்கள் தோறும் நடைபெற்று வருகிறது.

ஊரியான், சம்புக்குளம், குமரபுரம் ஆகிய மூன்று கிராமங்களிலும் கிராம உத்தியோகத்தர்களின் உதவியுடன் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் - பொதுவான உணவுப் பழக்கவழக்கங்கள், குழந்தைகளுக்குத் தாய்ப்பாலின் அவசியம், சுகாதாரமாகவும், சுத்தமாகவும் வாழ்வது எப்படி? குடும்பக் கட்டுப்பாடு, வீட்டுத்தோட்டத்தின் அவசியம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**செப்ரெம்பர் - 20**

1418: இங்கிலாந்து ஆட்சியை எதிர்த்து, அரசர் நான்காம் ஹென்றியின் ஆணைக்கு கீழ்ப்படியாமல் பத்து ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடிய வேல்ஸ் மாறிய விடுதலை வீரர் "ஓவன் கிளண்டோவர்" மரணமானார்.

1519: போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த கடலோடியான பெர்டினாண்ட் மெகல்லன், ஸ்பெயின் நாட்டு மன்னர் முதலாம் சர்லஸ்ஸின் ஆதரவுடன் உலகைச் சுற்றி வரும் தனது முதலாவது கடல் பயணத்தை ஆரம்பித்தார்.

1803: ஐரிஷ் புரட்சித் தலைவர் ரொபர்ட் எம்மேட் பிரித்தானிய அரசால் தூக்கிலிடப்பட்டார்.

1848: விஞ்ஞான ஆய்வுகளுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், மக்களிடையே விஞ்ஞான முடிவுகளைப் பரப்புவதற்காகவும் அமெரிக்காவில் "அமெரிக்கன் அஷோஷியேசன்ஸ் ஃபோர் அட்வான்ஸ் மென்ட் ஒப் சயன்ஸ்" என்ற அமைப்பு நிறுவப்பட்டது.

1878: இந்தியாவில் "ஹிந்து" பத்திரிகை வார இதழாக வெளிவர ஆரம்பித்தது.

1889: முதன் முதலாக பொதுமக்களது விநியோகத்துக்கென மின் உற்பத்தி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. பிரிட்டனின் பிராட்ஃபோர்ட் என்ற இடத்தில் "சீமன்ஸ் கோப்பரேஷன்" என்ற நிறுவனமே திறந்து வைக்கப்பட்ட நிறுவனமாகும்.

1896: முதன் முதலாக மோட்டார் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. பிரான்சில் ஆட்டோ மோபைல் கிளர் என்ற அமைப்பே இந்தப் பந்தயத்தை நடத்தியது.

1898: நாவல்கள் எழுதிப் பெரும் புகழ்பெற்ற ஜேர்மனி நாவலாசிரியர் "தியோடர் ஃபோன்டானா" காலமானார். "புயலுக்கு முன்" என்ற இவரது முதல் நாவல் வெளிவந்த போது இவருக்கு வயது 60.

1912: "டிரான்ஸ் காகஷியா" குடியரசு அமைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

1912: கால்நடைகளுக்கான மருத்துவமனை முதன்முதலாக லிவர்பூலில் திறந்து வைக்கப்பட்டது.

1942: இந்தியாவின் தேஜ்பூர் மாவட்டத்தில் கோல்ப்பூர் காவல் நிலையத்தில் கணன் லதா பரூவா என்ற பெண் இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்தாள். இதனைக் கண்ட ஆங்கிலேயப் பொலிஸார் அவளை அந்த இடத்திலேயே சுட்டுக்கொன்றனர்.

1961: இடையில் எங்குமே ஓய்வெடுக்காமல் ஆங்கிலக் கால்வாயை இருமுறை நீந்திக் கடக்கும் போட்டி, (நீந்திச் சென்று மீளத்திரும்பிப் புறப்பட்ட இடத்துக்கு வருவது) நடைபெற்றது. ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த நீச்சல் வீரர் "அண்டோனியேர் ஆல்ப்பட்டோன்டோ" வெற்றி பெற்றார்.

1963: "முதியவர்கள் பதவி துறந்து இளையவர்களுக்கு இடம் கொடுத்து கட்சியை வளர்க்கப்பாடுபட வேண்டும்" எனக் கோரியபடி, காமராஜர் தனது முதலமைச்சர் பதவியைத் துறந்தார்.

1981: அமெரிக்கக் கண்டத்தின் பிரித்தானியாவின் கடைசிக் குடியேற்ற நாடான பெலிஸ் விடுதலை அடைந்தது.

1984: பெய்ரூட்டில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் இருபது பேர் இறந்தனர்.

1985: மெக்ஸிக்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் எண்ணாயிரத்துக்கும் மேற்பட்டோர் மரணமடைந்தனர்.

1993: இந்தியா ஏவிய பி.எஸ்.எல்.வி ஏவுகணை இறுதிக்கட்ட நிலையில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கடலில் விழுந்தது.

1994: ஹெயிட்டி இராணுவ ஆட்சியாளர்கள் பதவி விலகினர். அமெரிக்க அமைதி காப்புப் படையினர் ஹெயிட்டி வந்து சேர்ந்தனர்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

வைர வரிகள்

நல்ல தருணம் எப்பொழுதும் நம் காலடியிலேயே இருக்கிறது. நாம் வேறெங்கும் தேடிப் போகவேண்டியதல்லை. நாம் செய்யவேண்டியது, அதை அடையாளம் கண்டு கொள்வதுதான. ஷிவ்கேரா.

## நமது நோக்கு

# அவர்களும், நாங்களும்; அடுத்துவரும் காலங்களும்...!

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தற்போதைய தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான அரசியல் கொள்கைகளுக்கு எதிராக கட்சியிலிருந்து கொண்டு, அதுவும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட, கட்சித் தலைமைப்பீடத்தின் ஆலோசனையையோ, ஒப்புதலையையோ பெறாமல் - கட்சியையும், கட்சித் தலைமையையும் மிகவும் கொச்சைத் தனமாக விமர்சித்து அவமானப்படுத்தியபடி கட்சிக் கூட்டணி அமைப்பிலிருந்து வெளியேறி - அரசுக்கு நெருக்கடியை உண்டுபண்ணிய ஜே.வி.பியினருடன் தேர்தல் ஆதரவு உடன்பாடொன்றில் கையெழுத்திட்டதாலும், அவர்களது நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு இயங்க சம்மதம் தெரிவித்தாலும், இதே போன்றதோர் உடன்பாடொன்றிற்கு ஜாதிக ஹெல உறுமயவினருடன் ஒத்துப்போயுள்ளதாலும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது ஜனாதிபதி மிகவும் 'கடுப்பாக' இருக்கிறார் என்றும், தற்போது வெளிநாட்டில் இருக்கும் அவர் நாடு திரும்பியதும் அதிரடி நடவடிக்கைகளில் இறங்கப்போகிறார் எனவும் கூறப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷ மீது எந்த ஒரு காலத்திலும் ஜனாதிபத் சந்திரிகா அவர்கள் மதிப்போ, நம்பிக்கையோ வைத்ததுமில்லை, அவரும் ஜனாதிபதிக்கோ அல்லது கட்சிக்கோ முழுமையான விசுவாசியாக இருந்ததுமில்லை. இதனை தென்பகுதி ஊடகங்கள் கடந்த காலங்களில் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு- அம்பாந்தோட்டை பிரதேசத்தில் மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு பரம்பரை பரம்பரையாக இருந்துவரும் மக்கள் செல்வாக்கின் ஆதரவுப் பலம் தேவை.

மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரின் அரசியல் செல்வாக்கை தக்கவைத்துக்கொள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடனான உறவும், பண்டார நாயக்க குடும்பத்தினருடனான தொடர்பும் அவர்களுக்கு அவசியம்.

இதனைவிடவும் இவர்களுக்கான கொள்கை - இலட்சியம் என்ற அடிப்படையிலான - உறவோ பிடிப்போ எதுவும் கிடையாது. எல்லாமே பதவி அதிகாரம், அரசியல் அனுகூலம் என்பவற்றின் அடிப்படையிலான சுயநல அபிலாஷைகளின் பெயரிலான சந்தர்ப்பவாத உறவுகளேயாகும்.

இப்போதும் அதே அடிப்படையிலான சந்தர்ப்பவாத - பதவியை இலக்காகக் கொண்ட அரசியல் சுயநல நகர்வுகளே இரு தரப்பினருக்குமிடையேயான அரசியல் - மற்றும் கருத்தியல் முரண்நிலைகளுக்கும் - மோதல் நிலைக்கும் காரணமாகும்.

இதில் தேசிய நலன் நோக்கிய பார்வையிலான நோக்கம் எதுவும் இருவருக்கும் கிடையாது.

ஆனால், தேசிய ஒருமைப்பாடு, மற்றும் நலன் குறித்தே தாம தங்கள் அரசியல் நகர்வுகளை மேற்கொள்வதாக இருதரப்பினருமே தம்பட்டம் அடிப்பதுதான் பொய்மையின் உச்சக் கட்டமாகும்.

இருவருமே பௌத்த சிங்கள பேரினவாத சமூகத்தவரின் - அதாவது பெரும்பான்மை இனத்தவரின் இரட்சகர்களாகக் காட்டிக்கொள்வதிலேயே எப்போதும் குறியாக இருந்து வந்துள்ளார்கள்.

இப்போதும் அப்படியேதான் இயங்கிவருகிறார்கள்.

இதில் அவர்களுள் எந்த வேறுபாடும் கிடையவே கிடையாது.

இருவருமே, தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக அடக்கி ஒடுக்கி மேலாதிக்கம் செய்யும் மனோ உறுதியுடன் அரசியல் நடத்துபவர்களே... இதில் ஒருவருரையொருவர் விஞ்சும் வகையிலேயே செயற்பட்டுவருகின்றனர்.

மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க சந்திரிகா அம்மையார் ஆரம்பத்தில் சம்மதித்தது ஒரு தற்காலிக அறிவிப்பின் அடிப்படையிலேயாகும்.

கடைசிக் கட்டத்தில் அவரை மாற்றிவிடும் உள்நோக்கமே அவரிடமிருந்தது. இந்த அச்சம் மகிந்தருக்கும் இருக்கவே செய்தது. இதன் காரணமாகவே அவர் தன்னிச்சையாக ஜே.வி.பி யினருடனும், ஹெல உறுமயவினருடனும் இணைந்து தனது ஆதரவுப் பலத்தைப் பெருக்கிக் கொள்ளவும், தனது வெற்றி வாய்ப்பை உறுதிசெய்யவும் தீர்மானித்தார்.

ஒருவர்மீது ஒருவருக்கிருந்த அவநம்பிக்கையே அனைத்து முரண்பாடுகளுக்கும் காரணமாகும்.

இந்த மோதலும், முரண்நிலையும் பேரினவாத அரசியல் தலைமைகளுக்கிடையேயான அதிகாரப் போட்டியின் அடிப்படையிலானதேயன்றி தேசிய நலனில் அடிப்படையிலானதல்ல என்பதே உண்மை.

ஜனாதிபதி வந்ததும் மகிந்த ராஜபக்ஷமீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பார், ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமயவுடனான உடன்பாட்டை ரத்துச்செய்யக்கோருவார் அல்லது மகிந்தரைக் கட்சியிலிருந்து நீக்குவதுடன் நாடாளுமன்றத்தையும் கலைப்பார், அனுராவைப் புதிய ஜனாதிபதி வேட்பாளராக்குவார், ரணிலுடன் பேசி தேசிய அரசொன்றை அமைக்கப்போகிறார்... என்றெல்லாம் ஊடகங்கள் ஊகங்கள் கூறுகின்றன.

அடுத்துவரும் நாட்களில் தென்னிலங்கை அரசியலில் பல குழப்பங்கள் ஏற்படலாம், திருப்பங்கள் ஏற்படலாம் அல்லது மாற்றங்களும் நிகழலாம். ஆனால், இவையெல்லாம் சிறுபான்மை மக்களின் வாழ்க்கையில் சமாதான முயற்சிகளில் இராணுவ அச்சுறுத்தல் நிறைந்த சூழலில் எதனையும் மாற்றப்போவதில்லை. அவர்கள் அதிகாரப் பதவிகளுக்காக மோதிக் கொள்வார்கள்.

நாங்கள் சுதந்திரத்துக்காகவும், உரிமைகளுக்காகவும் போராடியே தீரவேணடும். அதுவே இன்றைய அரசியல் யதார்த்தமுமாகும்!

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com



நான் என் உயிரிலும் மேலாக நேசிக்கும் உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிழர்ந்தெழ வேண்டும். இங்கு ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும். *- தியாக தீபம் லெப்.கேணல் திலீபன்-*

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# முறுகினாலும், குமுறினாலும் தேர்தல் வெற்றிக்கு ஒத்துழைப்பது தவறாது!

சிங்கப்பூரிலும் நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவற்கு பிரதம மந்திரி லீ சியன் லூங் திட்டமிட்டு வருவதாக பத்திரிகைச் செய்தியொன்று தெரிவித்திருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தல் இனி 2007ஆம் ஆண்டில்தான் நடைபெறவேண்டுமாம். ஆனாலும், விரைவிலேயே தேர்தல் நடத்துவதற்குப் பிரதமர் திட்டமிட்டிருக்கிறாராம் என்று சொன்னபடி வந்தார் நண்பர் பரமசிவம்.

இங்கே ஜனாதிபதித் தேர்தல் அமர்க்களமாகத் தொடங்கியிருக்கிறது. வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரக் கூட்டங்களைப் போட்டி போட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன்னர் கொழும்பு நகரசபை வளவில் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் கூட்டம் நடத்தியிருக்கிறார். நாளை அதே இடத்தில் மஹிந்த ராஜபக்ஷ தமக்கு ஆதரவு கேட்டுக் கூட்டம் நடத்துகிறார். இஸ்லாமிய மக்களின் வாக்குகளை எப்படிப் பெறுவது என்பதற்காக இரண்டு தரப்பிலும் பழைய கதைகளையெல்லாம் பேசிக் கொண்டு திரிகிறார்கள். இது மட்டுமல்ல; பௌத்தர்களுக்கு என்னென்ன செய்தார்கள் என்பதைப் பற்றிப் பரம்பரையை இழுத்துப் பிரசாரம் செய்கிறார்கள். பண்டாரநாயக்க 1956ஆம் ஆண்டில் சிங்கள பௌத்தத்துக்குப் புனர்வாழ்வளித்து மக்களுக்கு விழிப்பூட்டிய வரலாறுகளை மஹிந்தவை ஆதரிப்பவர்கள் பேசுகிறார்கள். பண்டாரநாயக்க வழியில் மஹிந்த மீண்டும் சிங்கள பௌத்தர்களுக்கு வழிகாட்டி விழிப்படையச் செய்ய வந்திருக்கிறார் என்று அவருடைய ஆதரவாளர்கள் - பிரசாரப் பீரங்கிகள் முழக்கமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதேசமயம் நவீன யுகத்தில் சிங்கள பௌத்தர்களுக்கு விழிப்பூட்டி, சிங்கள பௌத்தர்களை அரியாசனத்திலிருத்தி வைத்ததே ஜே.ஆர்.ஜெயவர்த்தனவென்றும், அவர் வழியில் நாட்டை முன்னேற்றுவதற்கு ரணில் விக்கிரமசிங்க முன்வந்திருக்கிறாரென்றும் அவரது ஆதரவாளர்கள் பிரசாரம் செய்துவருகிறார்கள். இந்த நேரத்தில் இதையெல்லாம் விட்டுவிட்டு சிங்கப்பூரில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கு பிரதமர் லீ முன்வந்திருப்பதாகச் சொல்லுகிறீரே என்று கேட்டேன்.

நீர் சொல்வது சரிதான். இங்கு ஜனாதிபதி தேர்தலுக்குக் கொடியேறுவதற்கு முன்பே ஆரவாரம் அதிகரித்திருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிடுமென்றும் ஜனாதிபதித் தேர்தல் முடிந்தபின் நாடாளுமன்றத்தை புதிய ஜனாதிபதி கலைத்துவிட்டு, நாடாளுமன்றத்துக்குப் பொதுத்தேர்தல் நடத்தக்கூடுமென்றும் சொல்கிறார்கள். இதுமட்டுமல்ல, அம்மையார் அமெரிக்காவிலிருந்து திரும்பியதும், மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனம் வழங்கமாட்டாரென்றும் அவர் சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு முரணாக ஜே.வி.பியுடனும் ஹெல உறுமயவுடனும் ஒப்பந்தங்கள் செய்திருப்பதால் தம்பி அநுரா பண்டாரநாயக்கவுக்கே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்குமென்றும் பலத்த வதந்திகள் அடிபடுகிறதே. இதில் உண்மையில்லாமலிருக்குமா? என்று பரமசிவம் கேட்டார்.

அப்படித்தான் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த ஒப்பந்தங்களினால் மஹிந்தவுக்கு நியமனப் பத்திரம் வழங்காமல், அநுரா பண்டாரநாயக்கவே ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட நியமிக்கப்படக்கூடுமென்று தெரிவிக்கின்றன. ஆனால், இவையெல்லாம் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனக்குத் தேர்தலில் கிடைக்கப்போகும் தோல்வியைக் கண்டு உளறிக் கொட்டும் வதந்திகள். நாடாளுமன்றத் தேர்தல் ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்தபின்னும் வராது, நடக்கமுன்னரும் வராது. நான்தான் சுதந்திரக் கட்சியின் வேட்பாளர். நான் அமோக வெற்றியீட்டுவது நிச்சயம் என்று சொல்கிறார் மஹிந்தா என்றேன்.

நீர் முன்பே சொன்ன மாதிரி எவருடன் எந்த ஒப்பந்தங்கள் செய்து கொண்டாலும் அது அவர்களுடைய ஆட்சி அதிகாரங்களுக்காக அவர்களுக்கிடையில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள். தங்களுக்குள் உள்ள பிரச்சினைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்று சேர்ந்து விடுவார்கள். தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது சம்பந்தமாகத் தமிழ்த் தலைவர்களுடன் சிங்களத் தலைவர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டால்தான், அவை கிழித்தெறியப்படும். இப்போ அம்மையார் எப்படி முறுகினாலென்ன, அநுரா குமுறினாலென்ன ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நவம்பர் பத்தாம் திகதி வாக்களிப்பு நடைபெறுமென்று உத்தியோக பூவர்வமாகவும் அறிவிக்கப்பட்டுவிட்டது. இனி எங்கள் கட்சிக்குள் பிளவுபட்டு நில்லாது மஹிந்தவைத் தெரிவு செய்ய வேண்டுமென்று அம்மையாரும் அநுராவுமே சொல்லிப் பிரசாரம் செய்தாலும் செய்வார்கள் என்று பரமசிவம் சொன்னார்.

சிங்கப்பூரில் மூன்று இளைஞர்கள் வகுப்புவாத சுலோகங்களை எழுதினார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டது பற்றிக் குறிப்பிட்ட பிரதமர் லீ சியன் லூங், யாராவது இன, மத சௌஜன்யத்தைக் குழப்புவதற்குத் தூண்டும் முயற்சிகளில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எச்சரித்திருக்கிறார்.

இங்கு இனவெறியைக் கிளப் பாதவர்கள் யார் இருக்கிறார்கள்? இதுபற்றி யாரும் கவலைப்படுகிறார்களா? என்று மேலும் கேட்ட படியே நடந்தார் பரமசிவம்.

தெற்குத் திசையிலிருந்து...

இந்திரஜித்



# யூகங்களும் வியூகங்களும் மோதும் ஜனாதிபதி தேர்தல் கள நிலமைகள்

அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி - நாடு திரும்பியதும் எடுக்கப்போகின்ற நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து நாடு இன்று எதிர்பார்ப்பு ஒன்றை கொண்டிருக்கிறது. அமெரிக்கா செல்லும்போது அவருடைய சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டிருந்த முறுகல்நிலை இன்னும் தீராதநிலையில் - அவர் எடுக்கும் நடவடிக்கைகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக உடைத்துவிடுமா? அல்லது மீண்டும் ஒன்று சேர்க்க உதவுமா? என்பதே அனைவர் மனதிலும் எழும் கேள்வியாக உள்ளது.

குறிப்பாக ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுடைய செயற்பாடுகள் முழுமையாக ஜனாதிபதியை கோபமடையச் செய்துள்ளது. அவர் ஏற்கனவே ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்துக்கொள்ள வேண்டாம் என வலியுறுத்தியபோதும், பிரதமர் அதனைச் செவிமடுக்கவில்லை. இதனையடுத்து அமெரிக்கா சென்றிருந்த நிலையில் ஜாதிக ஹெல உறுமயவுடன் பிரதமர் தமது உத்தரவையும் மீறி ஒப்பந்தம் செய்து கொண்டார் என்பது சந்திரிகாவை மேலும் கோபமடையச் செய்துள்ளது. இதற்குள் அவர் தற்சமயம் கடைபிடித்துவரும் ஐக்கிய தேசிய கட்சியுடனான மென்போக்கும் பலரையும் சிநதிக்க வைத்துள்ளது. நாட்டில் இனபபிரச்சினையைத் தீர்க்க சமஷ்டி முறையிலான தீர்வு காணப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையில் அவர் ஆற்றியுள்ள உரையின் பின்னணியில் அவருடைய கட்சியிலுள்ள பிரதமர் அவ்வாறான ஒரு கொள்கைக்கு எதிராக செயற்படும் ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் ஒப்பந்தங்களைச் செய்துக்கொண்டமையானது ஜனாதிபதியை மாத்திரமல்ல சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஆதரவாளர்களையும் குழப்பமடைய வைத்துள்ளது.

ஏற்கனவே ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையில் முறுகல்நிலை ஒன்று இருந்து வந்தது. தமது சகோதரரான அனுரா பண்டாரநாயக்கவை முன்னிலைக்கு கொண்டு வரவேண்டும் என்ற நோக்கிலும், பண்டாரநாயக்க பரம்பரையின் செல்வாக்கை சிறிலங்கா சுதந்திர கட்சி தொடர்ந்தும் வைத்திருக்கவேண்டும் என்பதிலும் ஜனாதிபதி காட்டிய அக்கறையே இந்த முறுகலுக்கான காரணமாகும். இதனை மையமாகக்கொண்டே பிரதமருக்கான பதவியில் அதிக அக்கறை கொண்டிருக்காத அனுராவை ஜனாதிபதி வேட்பாளராக்கி விடவேண்டும் என்பதில் சந்திரிகா முனைப்பாக செயற்பட்டார். எனினும் தமக்கு கட்சியின் முன்னிலை உறுப்பினர்கள் சார்பாக இருக்கின்ற போதும், பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயற்படுகிறார்கள் என்பதை அறிந்து கொண்ட ஜனாதிபதி சந்திரிகா அதற்கு வழிவிட வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானார்.

ஆரமபத்தில் மஹிந்த ராஜபக்ஷவுகரும், ஜே.வி.பிக்கும் இடையில் முறுகல் காணப்பட்டமையால் அவர் ஜே.வி.பியுடன் இணக்கம் ஒன்றுக்கு வரமாட்டார் என்றே ஜனாதிபதி கருதினார். எனினும் தான் எந்த வழியிலாவது வெற்றி பெற்றே தீரவேண்டும் என்ற நிலையில் இருக்கும் மஹிந்த ராஜபக்ஷ தமது வெற்றிக்காக எவருடனும் கைகோர்க்க தயார் என்ற நிலையில் ஜே.வி.பியுடன் உடன்பாடு ஒன்றை செய்து கொண்டார். இதில் புதினம் என்னவென்றால், ஜே.வி.பியின் ஆதரவை பெற்றுக் கொள்வதற்காக அந்த கட்சி விதித்திருந்த 12 நிபந்தனைகளையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எவ்வித திருத்தமும் இன்றி ஏற்றுக்கொண்டு அதில் கையொப்பமிட்டதேயாகும். அதற்கு அப்பால் சென்று இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வுகாண முடியாது என்றநிலையில் உள்ள ஜாதிக ஹெல உறுமயவின் நிபந்தனைகளையும் பிரதமர் ஏற்றுக்கொண்டார்.

இவ்வாறு நடந்துகொண்டமை காரணமாக பிரதமர் முழுமையாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகளை எதிர்பார்க்காமல் ஜே.வி.பியின் வாக்குகளையும், ஜாதிக ஹெல உறுமயவின் வாக்குகளையும் நம்பியே ஜனாதிபதித் தேர்தல் களத்தில் நிற்கவேண்டிய நிலைப்பாட்டை எடுத்துள்ளார் என கருதவேண்டியுள்ளது. இதன் காரணமாக பிரதமருக்கு இரண்டு தீமைகள் ஏற்படப்போகின்றன. ஜே.வி.பி - சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் இணைவதை விரும்பாத சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் மஹிந்தவுக்கு வாக்களிக்க மாட்டார்கள். மறுபுறத்தில் தாம் தனித்து போட்டியிட்டால் தமது வாக்குப்பலம் ஏற்கனவே நடைபெற்ற தேர்தல்களை காட்டிலும் குறைந்துவிடும் என கருதிய ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவையும் நம்பி பிரதமர்களத்தில் இறங்கியமை யதார்த்ததிற்கு அப்பாற்பட்ட விடயமாக தெரிகிறது.

இனப்பிரச்சினை தீர்வுக்கு அப்பாற்பட்டு நாடு இன்று எதிர்நோக்கியுள்ள தீவிரமான பொருளாதார பிரச்சினைகளுக்கு மத்தியில் ஜே.வி.பிக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும் வாக்களிக்க புதிய வாக்காளர்கள் அணிதிரளுவதற்கு வாய்ப்பில்லை. அத்துடன் ஏற்கனவே அவர்களுக்கு வாக்களித்தவர்களிலும் பாரிய தொகையினர் இன்று அந்தக் கட்சிகளுக்கு வாக்களிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. மறுபுறத்தில் தோல்வியடையும் ஒருவேட்பாளருக்கு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதைகாட்டிலும், வெற்றி பெறும் வேட்பாளருக்கு வாக்களிக்கும் முறையே பொதுவாக சிங்கள வாக்காளர்கள் மத்தியில் இருந்துவரும் கொள்கை என்பதால். இதனைப் புரிந்துகொண்டே ஜே.வி.பியினால் தனித்து நின்று இரணடு லட்சம் வாக்குகளைக்கூட பெறமுடியாது. அவ்வாறு பெற்றால் தாம் அந்தக்கட்சியின் நிபந்தனைகளுக்கு அடிபணிவதாக ஐக்கிய தேசிய கட்சி சவால் விட்டது. இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியில் குறித்த இரண்டு கடசிகளுடனும் ஒப்பந்தங்களை செய்து கொண்டமையால், சிறிலங்கா சுதந்திர கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடும் எனக்கருதும் சிங்களவர்களும், இனத்துவேச நிலைப்பாட்டில் தொடர்ந்தும் கட்சியின் ஆதரவாளர்களாக இருக்கும் சிறிலங்கா சுதந்திர கட்சியினரும் மஹிந்தவுக்கு வாக்களிக்க முன்வருவார்கள்.

இது மஹிந்த ராஜபக்ஷவை பொறுத்தவரையில் இரண்டு கடசிகளுடன் அவர் செய்துகொண்ட ஒப்பந்தத்தால் ஏற்படப்போகும் நன்மையாகும். எனவே, இவற்றை வைத்துக் கொண்டு தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் களநிலவரத்தை பார்க்கும்போது, அது ஐக்கிய தேசிய கட்சிக்கே வாய்ப்பாக அமைந்துள்ளது எனலாம். அதாவது, அதன் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க 50 இற்கும் மேற்பட்ட வீதத்திலான வாக்குகளை பெறுவார் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதற்கு பிரதான காரணமாக அவர் தமது ஆட்சியில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சு பதவிகள் வழங்கப்படும். ஜனாதிபதி சந்திரிகாவின் ஒத்துழைப்பு தொடர்ந்தும் சமாதான ஏற்பாடுகளுக்கு பெற்றுக் கொள்ளப்படும். சந்திரிகா கௌரவ பிரஜையாக ஏற்றுக் கொள்ளப்படுவார் என்ற அளவில் வைத்துள்ள யோசனைகள் அமைந்துள்ளன.

இந்த கொள்கைகள் காரணமாக சந்திரிகாவுக்கு சார்பான அனைவரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள். இது இவ்வாறிருக்க ரணில் - சந்திரிகா கூட்டுத்தயாரிப்பில் ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் கொள்கை ஒன்று திரைமறைவில் நடந்துக்கொண்டிருக்கிறது. இது சாத்தியமானால் எதிர்கால ஐக்கிய தேசிய கடசியின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்தில் பிரதமராக அனுராபண்டாரநாயக்க தெரிவுசெய்யப்படக்கூடிய வாய்ப்புகள் குறித்தும் தற்போது பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு கொண்டிருக்கின்றன. எனவே, ஜனாதிபதி அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பலானது இதற்கு வாய்ப்புகளை பெறறு கொடுக்கப்போகிறதா? அல்லது கட்சியின் நலனை மாத்திரமே கொண்டதாக அமையப்போகிறதா? இதற்கு மத்தியில் ஜனாதிபதியால் அமெரிக்காவுக்கு விசேட விருந்தினராக அழைத்து செல்லப்பட்ட - ஜனாதிபதித் தேர்தலில் சுமார் இரண்டு லட்சம் வாக்குகளுக்கு சொந்தக்காரராகக் கருதப்படும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் தற்போதைய ஐக்கிய தேசிய கட்சியின்பால் சார்ந்த கொள்கையில் மாற்றம் ஏற்படுமா? காலம்தான் அதற்கு பதில் சொல்லும்.



# சுனாமியால் தேசியம் நோக்கிய ஆற்றுப்படை அரங்காலயம்

அரங்கு சமூக மேம்பாட்டுக்கும் அதன் வழிப்படுத்தலுக்குமான பாதையைத் திறந்துவிடும் கருவி. இங்கு உணர்வுகளின் உண்மை வெளிப்பாட்டுக்கான இடம்கிடைக்கிறது. எனவே "சுதந்திரப் பிரகடனம் இடம் பெறும் இடம் அரங்கு" ஆகி உள்ளது. ஒவ்வொரு மனித மனமும் தன்னுடைய ஆழ்மனதின் உணர்வுகளையும், விருப்புகளையும் எந்தத் தடையுமின்றி வெளிப்படுத்தக்கூடிய நிலைமை அரங்கில் உண்டு.

இவ்வாறான வலுவுடைய அரங்கை மூலதனமாய்க் கொண்டு முல்லை மாவட்டத்தில் அரங்க செயற்பாட்டுக் குழுவுடன் அந்த மாவட்டத்தில் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களும் இணைந்து அரசசார்பற்ற நிறுவனத்தில் ஒன்றான யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆழிப் பேரலையால் பாதிப்புற்ற முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கான ஆற்றுப்படுத்தல் வேலையில் ஈடுபட்டுவருகின்றனர்.

சுனாமியின் வேர்கள் ஆழமாய்ப் பதிந்து முற்றுகையிட்ட ஈழத்தின் முக்கிய பகுதிகளில் முல்லைத்தீவும் ஒன்று. சுனாமியின் பசி தீர்ந்து இன்று ஒன்பது மாதங்களாகிவிட்டன. ஆயினும் அவலப்பட்டு பட்டமரங்களாகிவிட்ட முல்லைத்தீவு மக்கள், அவலங்களிலிருந்து மீண்டு எழுதல் என்பது தூர இலக்காக நகர்கிறது. ஆனாலும், அவர்களின் மனங்கள் மெல்ல மெல்ல ஆற்றுப்பட முடிகிறது. சொல்லொணா வடுக்களால் சூழ்ந்து தவிக்கிறார்கள். உலக நாடுகளால் ஆழிப்பேரலை அனர்த்தத்துக்காகக் கொடுக்கப்பட்ட நிதி உதவிகள் சிங்களப் பேரினவாத சக்திகளின் சதியால் மறுதலிக்கப்பட்டமை, தடை செய்யப்பட்ட நிதிகள், ஒரவஞ்சக நிலைமைகள் இவை அனைத்திற்கும் நடுவில் தங்கள் மீள் கட்டுமானத்துக்காகப் போராடும் இந்த மக்கள் அன்றாட வருவாய்க்கும் தொழில் முதல் அற்றவர்களாய் அவஸ்தைப்படுகின்றனர். இத்தகைய கண்மூடித்தனமான சிங்கள அரசாட்சியின் காரணமாக ஆளையாள் பிய்த்துப் பிறாண்டும் கோர அவலங்கள் சங்கிலித் தொடராய் நீள்கிறது.

இந்தநிலையில் அவலநீக்க ஆற்றுப்படையரங்க செயற்பாட்டில் ஈடுபடும் அரங்க செயற்பாட்டுக்குழுவினர், குறித்த மக்களை "பக்குவமாக தங்கள் பிரச்சினையை வெளியே எடுத்துச்சொல்வதற்கான முறையில் அவர்களைத் தயார்படுத்தல்" என்னும் நோக்கில் தொடர் அரங்க செயற்பாட்டின் ஓர் கட்டமாக. 04.09.2005 அரங்காலயத்தில் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் ஒன்றுகூடினர். பங்குகொண்ட மக்களும், அரங்க செயலாளர்களும் ஒன்றாக இணைந்து அவர்களின் உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டனர். ஒவ்வொருவரின் கருத்துகளும் பரிமாறப்பட்டன. அதனூடாக அவர்களிடம் ஓர் நம்பிக்கை வலுவுற்றது. வலுவான தொடர்பாடலூடாக தங்கள் பிரச்சினைக்கான மூல காரணிகளை இனங்கண்டு பக்குவமாக தங்கள் பிரச்சினைகளை உலகத்துக்கு வெளியெடுத்துச்சொல்ல அதைப் பகிர்ந்து கொண்டனர்.

அரங்காலயத்தில் அதற்கான இடம் அவர்களுக்குக் கிடைத்தது. இதுபற்றிக் கலந்துகொண்ட மக்களில் ஒருவர் கூறிய கருத்து - "எவ்வளவோ நிறுவனங்களைச் சந்தித்தோம். இன்றைய நாளில் எங்கட மனதில் என்னென்ன இருக்கோ அதெல்லாம் கேட்டுக் கதைத்தமாதிரி நாட்கள் வேறு இல்லை. சுனாமிக்குப்பிறகு காணாத சந்தோஷத்தை நாங்க இங்க கண்டோம். இது நிச்சயமா எங்கட பிரச்சினை தீரும் வழி என்று கண்டோம்."

கணவனை இழந்தும், மனைவியை இழந்தும், பிள்ளைகளை இழந்தும், பெற்றோரை, உடன்பிறப்பை இழந்தும் தனித்தனி உறுப்பினர்களாகக்கூட எஞ்சி நிற்கும் மக்களின் சுனாமிப் பேறுகள் சொல்லில் அடங்காது. தன் துணைவியை இழந்து தனியான ஓர் அறுபதுவயது ஐயா -

"மனைவியை இழந்து கவலைப்பட்டேன் இண்டைக்கு இந்த இடத்தில என்னை அறியாமலே கையைத் தட்டினேன், சந்தோஷமாய்க் கிடக்கு" எனக் கூறினார்.

கடற்தொழில் செய்யும் ஓர் இளம் வாலிபன் கூறிய கதை இது- "என்ர தங்கச்சி கடலோடு போட்டுது. என்ர சித்தப்பாவுக்கு ஓர் பொடியன், அண்ணான்ர மனுசி, மாமி எல்லாம் போட்டினம். எனக்குக் கலியாணம் பேசிவைச்ச மச்சாளும் கடலுக்கதான். நினைக்கேலாது எல்லாம் போட்டுது. இந்த அரங்காலயத்துக்கு வந்து எங்கட மனங்கள் ஆறுதல் அடையுது. நீங்கள் எல்லா முகாமுக்கும் வரவேணும்"

"இண்டைக்கு நாங்கள் சிரிச்சம்"

"எங்களுக்கு வடிவான சந்தோஷமாய் இருக்கு"

"இவ்வளவு கதைச்சதே வயிறு நிரம்பிட்டுது. பசியில்லை"

"கூட்டம் போடாமல், ஆர்ப்பாட்டம் போடாம எங்கள் ஒவ்வொருவர் கதையைக் கேட்டது திருப்தி" என்று தமது உள்ளத்திலிருந்த சுமைகளையெல்லாம் அரங்காலய வெளியில் கொட்டிப் பரப்பினார்கள்.

அரங்கு அவர்களுக்குப் பேசுவதற்கான வெளியைக் கொடுத்தது. மனம்திறந்து சிரிப்பதற்கான உணர்வைக் கொடுத்தது. அதன் உறவுப்பலம் அவர்களை ஆற்றுப்படுத்தியது. இந்த வெளிப்பாட்டுத் தளத்தின்மூலமாகத் தங்கள் பிரச்சினைகளை அவர்கள் வெளிக்கூறினர். அவர்கள் முனைப்புற்றனர். கூட்டம் என்றாலே சலித்து ஒதுங்கிக்கொள்ளும் மக்களின் அனுபவத்தில் இன்று தாங்கள் கூடியதன் உன்னதம் என்ன என்று அவர்களே விதந்துகூறினர்.

"எத்தனையோ உதவி வழங்கும் நிறுவனங்கள் 'கூட்டம் கூட்டம்' என்று கூட்டும், ஆர்ப்பாட்டம் போடும், பதியும் ஆனால் ஒன்றும் நடப்பதில்லை. இண்டைக்கு அப்படி ஒன்றுமேயில்லை. ஆனால் இன்று திருப்தியாக இருக்கு. எங்கட கதையைக்கேட்க வழி கண்டுபிடித்தாயிற்று" அந்த மக்கள் சினந்து கொள்வதில்லை. சுமந்துவந்த பிரச்சினை மூடைகளை இறக்கிவைத்தனர். பிரித்துப் படித்தனர். அக்கினிப் பிழம்பாக எதிர் கொள்ளும் பிரச்சினைகள் சொல்லில் அடங்காதவை. அவர்களின் எதிர்காலம்பற்றிய கேள்விகளும் ஏராளம்.

'கடற்தொழில் வளம் இல்லாத பிரச்சினை'.

'வீடு கட்டுவதற்கான பணம் ஒதுக்கப்பட்டாலும், காணி இல்லாத பிரச்சினை'.

'பிள்ளைகளுக்கான வேலை வாய் ப்பு.

'வேறுபாடு காட்டும் உதவிக் கொடுப்பனவுகள்'.

'துணையிழந்த பெண்களுக்கான தொழில்'.

'வந்தான் வரத்தான் என ஒதுக்கப்படும் பிரச்சினை'.

'இடம்பெயர்ந்தவர்களுக்கும், நிரந்தர வசிப்பிடம் உள்ளவர்களுக்கும் இடையேயான பிரச்சினை'.

'உதவி நிறுவனங்கள் இந்த மக்களின் தேவைகளை அறியாமை'.

'அடிக்கடி கூட்டங்களால் ஏற்படும் சலிப்பு'.

'போக்குவரத்து, மின்சாரம், கல்வி என பல அடிப்படைப் பற்றாக்குறைகள்.

எனப் பிரச்சினைகளின் பட்டியல் நீண்டுசென்றது.

இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் விடைதேடமுயன்ற மக்கள்கூறிய கருத்து இது -

"எங்கட அவசியமான தேவைகளையும் எங்களுக்கு ஏற்படுகிற பிரச்சினைகளையும் இனங்கண்டு தொகுத்து கட்டம் கட்டமாக சம்பந்தப்பட்ட செயலாளிகளுடன் இண்டைக்கு நடந்த மாதிரி சந்தோஷமும், விருப்பமும் தருகின்ற உறவுடன் கூடிய சந்திப்பைப்போல அவர்களுடன் சந்தித்துக் கதைப்பம். படிப்படியா எங்கட பிரச்சினையைத் தீர்ப்பம். எல்லாமே எங்கட எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே"

ஆனால் "எங்களுக்கு வாறதையெல்லாம் சிங்கள அரசு தடுக்கிறது. சுனாமி அவலத்தைக் கூடக் கண்டும் காணாத மாதிரி இருக்கு. தமிழ் மக்கள் ஒன்று திரண்டு எழ அத்திபாரமாக இந்தநாள் இருக்கு"

என்று முல்லை மாவட்டத்தின் கல்லாறு தொடக்கம் அளம்பில் வரையாக வாழும் இடம்பெயர்ந்த மக்களின் அபிப்பிராய முதல்வர்களாகக் கலந்து கொண்டவர்கள் விதந்துரைத்தனர்.

தேசியத்தின் பலமும், தேசத்தின் விடுதலையும் மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

"எங்களுக்கு உரிமை கிடைக்காட்டி நாம் போராடுவோம். மக்களெல்லோரும் ஒன்றுகூடி எங்கள் குரல் ஓங்கி ஒலிக்க உரக்கச் சொல்வோம்"

என்ற நம்பிக்கையுடன் நிமிர்ந்தனர்.

"நாங்கள் சுதந்திரமான தமிழீழத்தில் வாழவிரும்புகிறோம். எங்களுக்கு நடைமுறையில் ஓர் உன்னதமான ஆட்சி இருக்கிறது. அதை அங்கீகரிக்கும்படி உலக நாடுகளுக்கு உரத்துக் கூறப்போகிறோம்."

என அவர்கள் தங்கள் விருப்பத்தை உலகநாடுகளுக்கு எடுத்துக்கூற, அலை அலையாக ஒன்று திரண்டு திடசங்கற்பம் பூண்டனர். மக்கள் சக்தி மாபெரும் சக்தி. அது ஒரு காட்டாறு. வீறு கொண்டு எழுந்துவிட்டால் மலை என்ன? மடு என்ன? தன் பாட்டுக்கு இலக்கை அடைவதற்காய் வேகங்கொண்டு, வீறாப்புடன் அடித்துச்செல்லும். மக்களின் சுதந்திரம் மக்களாலேயே பெறப்படும்.

- க.துவாரதி.
அரங்க செயற்பாட்டுக்குழு.

# வன்செயல்களுடன் முடிவடைந்த ஆப்கான் நாடாளுமன்ற தேர்தல்!



காபூல் —

ஆப்கானிஸ்தானில் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் முதன்முறையாக தேர்தல் நடைபெற்றது. எனினும் தேர்தல் வன்செயல்களில் 2 பொலிஸார் உட்பட கிளர்ச்சிவாதிகள் பலர் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2001 ஆம் ஆண்டு தலிபான்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. ஜனாதிபதி ஹமீத் கர்சாய் தலைமையில் ஜனநாயக ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது.



இந்த நிலையில் நாடாளுமன்ற மற்றும் பிராந்திய சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்படி ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக தேர்தல் நடைபெற்றது. வாக்களிப்பு நிலையங்களுக்கு ஏராளமான ஆண்களும், பெண்களும் சென்று ஆர்வமாக வாக்களித்தனர்.

இந்தத் தேர்தலைப் புறக்கணிக்கும்படி தலிபான்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். இதனையொட்டி ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் தீவிர பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். தலிபான்களின் மிரட்டலைப் பொருட்படுத்தாமல் பெருமளவான மக்கள் வாக்களித்தனர்.

வாக்களிப்பு ஆரம்பமாவதற்குச் சற்றுமுன்னர் சில இடங்களில் தலிபான்கள் தாக்குதல் நடத்தினர். கோஸ்ட், கந்தகார், குனார் ஆகிய இடங்களில் இந்தத் தாக்குதல்கள் நடந்தன. இதில் ஆப்கான் ராணுவத்தினர் 6 பேர் காயமடைந்தனர்.

ஹில்மான்ட் என்ற இடத்தில் வாக்களிப்பு நிலையமருகே மோதல் ஏற்பட்டது. இதில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தலைநகர் காபூலில் கிளர்ச்சிவாதிகள் 2 ரொக்கெட்டுக்களை வீசினார்கள். அதில் ஒன்று ஐ.நா. அலுவலகம் அருகே விழுந்து வெடித்ததில் ஊழியர் ஒருவர் காயமடைந்தார். மொத்தம் 12 இற்கும் மேற்பட்ட இடங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். கோஸ்ட் என்ற பகுதியில்தான் பெரியளவில் மோதல்கள் ஏற்பட்டன. இங்கு 2 பொலிஸார் பலியானார்கள். சிலர் காயமடைந்தனர். கிளர்ச்சிவாதிகள் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தான் பகுதியிலிருந்து 12 கிளர்ச்சிவாதிகள் ஊடுருவ முயன்றனர். இதனை முறியடிக்கப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனையடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் 3 மணிநேர துப்பாக்கி மோதல் இடம்பெற்றது.

மற்றொரு பகுதியில் கண்ணிவெடியில் சிக்கி இராணுவ வாகனம் சிதறியது. இதில் பிரான்ஸ் விசேட படைவீரர் ஒருவர் பலியானார்.

காபூல் நகருக்கு வெளியே பெரிய மணிக்கூடு ஒன்று அனாதரவாகக் கிடந்தது. அதனைப் பொலிஸார் கைப்பற்றிச் சோதித்தபோது வெடிகுண்டுகள் நிரப்பி வைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. தாக்குதல் நடத்துவதற்காக கிளர்ச்சிவாதிகள் அதை எடுத்து வந்திருக்கின்றனர். பொலிஸ் பாதுகாப்பு அதிகம் இருந்ததால் அநாதரவாக அதனைப் போட்டுச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமைத் தேர்தல் அதிகாரி பீட்டர் எர்மென் கூறுகையில் –



வாக்குப் பதிவு இடையூறின்றி நடைபெற்றது. சில வாக்களிப்பு நிலையங்களில் மட்டுமே சற்றுத் தாமதமாக வாக்களிப்பு தொடங்கியது என்று தெரிவித்தார்.




# பெரிதாகிவரும் ஓசோன் மண்டல துவாரத்தின் பாதிப்புக்கள் குறித்து விஞ்ஞானிகள் ஆராய்வு

ஜெனீவா —

ஓசோன் வாயு மண்டலத்தில் மிகப்பெரிய துவாரம் ஏற்பட்டுள்ளது. இதனால் பூமிக்கு பாதிப்பு ஏற்படுமா? என்று விஞ்ஞானிகள் ஆய்வுசெய்து வருகின்றனர்.

நாம் வாழும் பூமிக்கு வெளியே ஓசோன் என்ற வாயு மண்டலம் உள்ளது. ஒரு போர்வை போல் பூமியைச் சுற்றி அது அமைந்துள்ளது. சூரியனிலிருந்து பூமியை நோக்கிவரும், உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் புற ஊதாக்கதிர்களை இந்த ஓசோன் மண்டலம்தான் தடுத்து நிறுத்துகிறது. காற்று மாசுபடுவதால் இந்த ஓசோன் மண்டலம் பாதிக்கப்பட்டுவருகிறது.

காற்றில் ஏற்படும் மாசினால் ஓசோன் மண்டலத்தில் துவாரம் ஏற்படுவதால் புற ஊதாக்கதிர்கள் பூமியைத் தாக்கும் ஆபத்து உள்ளது. றெப்ரிஜிரேட்டர், குளிரூட்டி இயந்திரங்கள் ஆகியவற்றிலிருந்து வெளியேறும் குளோரோபுளோரோ காபன் என்ற வாயுவால் ஓசோன் மண்டலத்தில் துவாரம் ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் காற்று மாசுபடுவதைத் தடுக்க உலக நாடுகளும், ஐ.நா.சபை அமைப்பும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

என்றாலும் மாசின் காரணமாக ஓசோன் மண்டலத்தில் துவாரம் ஏற்பட்டுள்ளது.

பூமியின் தென்பகுதியில் உள்ள அண்டாட்டிக் கடலுக்கு மேலே ஓசோன் மண்டலத்தில் மிகப் பெரிய துவாரம் ஏற்பட்டிருப்பதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இந்தத் துவாரம் 2 கோடி 70 லட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்டது. இந்தத் துவாரம் இன்னும் ஒரு வாரத்தில் மேலும் 10 லட்சம் கிலோமீற்றர் பரப்பளவில் விரிவடைய வாய்ப்பு இருப்பதாகவும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

ஓசோன் மண்டலம் பாதிக்கப்படுவதைத் தடுக்க வகை செய்யும் மாண்ட்ரீல் ஒப்பந்தத்துக்கு ஏற்கனவே 184 நாடுகள் அனுமதியளித்துள்ளதாகவும், அதை எல்லா நாடுகளும் தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்றும் ஐ.நா.பொதுச்செயலாளர் கொபி அனான் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் ஓசோன் மண்டலத்தில் மிகப்பெரிய துவாரம் ஏற்பட்டிருப்பதால் பாதிப்பு ஏற்படுமா? என்பது பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள்.

# வானத்தில் சுற்றிவரும் எரிகல்லை வெட்டி எடுத்துவருவதற்கு முயற்சி!

ரோக்கியோ —

வானத்தில் சுற்றிவரும் எரிகல்லை வெட்டி எடுத்து வர ஜப்பான் விண்வெளி நிபுணர்கள் திட்டமிட்டுள்ளனர்.

பூமி உட்பட அனைத்து கிரகங்களும் 460 கோடி ஆண்டுகளுக்கு முன் உருவானதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

அவ்வாறு கிரகங்கள் உருவான போது ஏற்பட்ட மிச்சங்கள் எரிகற்களாக வானத்தில் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன.

இத்தகைய எரிகற்கள் பூமி மீது மோதுவதால் தான் டயனோசர் இனங்கள் அழிந்தது போன்ற பேரழிவுகள் நிழ்வதாக கருதப்படுகிறது. எனவே வரும் காலத்தில் எரிகற்கள் பூமி மீது மோதுவதைத் தடுக்க என்ன செய்யலாம் என்று விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்துகின்றனர்.

எரிகற்கள் என்பவை வெறும் தூசி மண்டலமா? அல்லது காற்றுப்பை போன்றதா? அல்லது கடினமான பாறைகள் ஆனதா? என்பது இன்னும் புரியாத புதிராக இருக்கிறது. எனவே எரிகற்களில் என்ன இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க ஜப்பான் விண்வெளி நிபுணர்கள் ஆராய்ச்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

பூமியிலிருந்து ஒரு றொக்கெட்டை அனுப்பி அதை ஒரு எரிகல் மீது மோதச்செய்து பின்னர் அந்த எரிகல்லில் இருந்து ஒரு பகுதியை வெட்டி எடுத்துவரவேண்டும் என்று முடிவு செய்தனர். இதற்காக கடந்த 2003ஆம் ஆண்டு ஹாயா புசா என்ற றொக்கெட்டை பூமிக்கு மிக அருகே சுற்றிக்கொண்டு இருக்கும் இடகோவா என்ற எரிகல்லை நோக்கி அனுப்பினார்கள்.

இப்போது அந்த றொக்கெட்ட 600மீற்றர் நீளமும் உருளைக்கிழங்கு வடிவமும் உள்ள இடகோவா என்ற எரிகல்லுக்கு மிக அருகே சென்றுவிட்டது.

இன்னும் சில வாரங்களில் அந்த றொக்கெட் எரிகல்லை நோக்கி ஒரு வெடியை வீசும். பின்னர் றொக்கெட்டில் இணைக்கப்பட்டுள்ள ஒரு குழாய் எரிகல்லின் ஒரு பகுதியை வெட்டி உறுஞ்சி எடுத்துவரும். ஒரு பெரிய குடுவையில் அவை சேகரிக்கப்படும்.

பின்னர் அந்தக் குடுவையை றொக்கெட் பூமிக்கு எடுத்துவரும். அந்தக் குடுவை அவுஸ்ரேலிய கடற்கரை அருகே வந்துவிழும் வகையில் ஜப்பான் விஞ்ஞானிகள் திட்டமிட்டுள் ளனர்.

எங்களது இந்தத் திட்டம் உலகிலேயே முதலாவது முயற்சியாகும். இது எந்தளவுக்கு வெற்றிபெறும் என்பதை இப் போது கூறமுடியாது.

ஆனால் எரிகல்லில் என்ன இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தால் எதிர்காலத்தில் அவை பூமி மீது மோதுவதைத் தடுக்க முயற்சி மேற்கொள்ளலாம் என்று ஜப்பான் விண்வெளி நிபுணர் தெரிவித்தார்.

# செல்போன் பயன்படுத்துவோர் 200 கோடி!



சென்னை —

செல்போன் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 200 கோடியை எட்டியுள்ளது. விலை அதிகமாக இருந்ததால் முதலில் இதை வசதி படைத்தவர்களே பயன்படுத்தினார்கள். விலை சற்றுக் குறைந்த பிறகு செல்போன் மீது ஏற்பட்ட மோகத்தால் அதை நிறையப்பேர் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

சமீபகாலமாக செல்போன் வைத்திருப்பது ஒரு கௌரவம் போல் ஆகிவிட்டது. இதன் கூடிய பயன்பாடு காரணமாக சாதாரண நிலையில் இருப்பவர்களிடம்கூட செல்போன் இருக்கிறது. தற்போதைய நிலவரப்படி உலகில் 3 இல் ஒருவரிடம் செல்போன் இருக்கிறது.

2002 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி உலகில் 100 கோடி பேரிடம் செல்போன் இருந்தது. நேற்றுமுன்தினம் அது 200 கோடியை எட்டியது. மூன்றே ஆண்டுகளில் 100 கோடி பேர் செல்போன் வாங்கியுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு உலகில் 300 கோடி பேரிடம் செல்போன் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. சுவீடன், இத்தாலி, ஆஸ்திரியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் 100 சதவீதம் செல்போன் இருக்கிறது.

ஆசிய கண்டத்தைச் சேர்ந்தவர்கள் தான் அதிகளவில் செல்போனைப் பயன்படுத்துவதாக தெரியவருகிறது. உலகில் தற்போது இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளில்தான்செல்போன் விற்பனை மிக அதிகளவில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## இரத்ததானம் - பயனுடையது

- உடலின் நிறை, குருதி செறிவு அறியப்படுகின்றது
- உடல்நிலை (நாடித்துடிப்பு, குருதி அழுக்கம்) சோதிக்கப்படுகின்றது.
- குருதிவகை முன்கூட்டியே அறியப்படுகின்றது
- குடும்ப அங்கத்தவர், நண்பர்களின் குருதி தேவைக்கு உதவமுடிகின்றது.
- வைத்தியசாலையுடனான உறவு நெருக்கமாகின்றது
- ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது
- குடும்ப, சமூக பொறுப்புணர்வு அதிகரிக்கின்றது.

இரத்தவங்கி,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்


## அரசின் எச்சரிக்கையையும் மீறி

# வீடுகளுக்கு திரும்புகின்ற நியூ ஓர்லியன்ஸ் மக்கள்!

நியூ ஓர்லியன்ஸ் —

அமெரிக்காவில் கத்ரீனா சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நியூ ஓர்லியன்ஸ் நகரின் சில இடங்களில் கடைகள் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளன. சிலர் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். மீட்புக் குழுவினரின் கடும் எச்சரிக்கையையும் மீறி இவர்கள் மீண்டும் வந்துள்ளனர்.

அமெரிக்காவில் கடந்த மாதம் 29 ஆம் திகதி கத்ரீனா சூறாவளி வீசியது. இதில் லூசியானா மாகாணத்தில் உள்ள நியூ ஓர்லியன்ஸ் நகரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.



நகரின் 80 சதவீத பகுதிகள் நீரில் மூழ்கி விட்டன. ஆயிரக் கணக்கான மக்கள் இறந்துவிட்டனர். சூறாவளி வீசிய மூன்று நாட்களுக்குப் பிறகே மீட்புப் பணியை ஆரம்பிக்க முடிந்தது.

நியூ ஓர்லியன்ஸ் நகரில் ஐந்து லட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் வெளியேறிவிட்டனர். இந்த நகரம் வழமைபோல் மீண்டும் செயற்பட மூன்று மாதங்களுக்கு மேலாகும் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில், ஓர்லியன்ஸ் நகர மேயர் நாகின், சிறிதளவு பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மீண்டும் தங்கள் இருப்பிடங்களுக்கு வரலாம் எனத் தெரிவித்தார். இதற்காகவே காத்திருந்தது போல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த பகுதிகளைச் சேர்ந்தவர்களும் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்று பார்வையிடத் தொடங்கிவிட்டனர். ஹோட்டல்கள், கடைகள் என சில வர்த்தக நிறுவனங்கள் செயற்படத் தொடங்கிவிட்டன.

இதற்கு மீட்புக் குழுவினரின் தலைவராக இருக்கும் கடற்படைத் துணை அட்மிரல் தாத் அலன் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். மக்கள் மீண்டும் வர நகரம் தயார் நிலையில் இல்லை. மின்சாரம் மற்றும் குடிநீர் வசதி இல்லை. பல இடங்களில் கழிவு நீர் தேங்கியுள்ளது. அடிப்படை வசதிகள்கூடக் கிடைப்பது சிரமம். எனவே மக்கள் யாரும் சிறிது காலத்துக்கு வரவேண்டாம் என்று அவர் தெரிவித்திருந்தார். ஆனால் இதைப் பலரும் பொருட்படுத்தவில்லை.

நியூ ஓர்லியன்ஸ் நகரில் தற்போது 40 சதவீத பகுதி நீரில் மூழ்கியுள்ளதனால் நீரை வெளியேற்றும் பணி நடந்து வருகிறது.

நமது ஈழநாடு
The Leading Daily of Tamils' Homeland

# 7 முஸ்லிம் கட்சிகள் இணைந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டி!

கொழும்பு —

முஸ்லிம் அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் ஒன்றிணைந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனித்து முஸ்லிம் வேட்பாளரை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளன.

ஜனநாயக ஐக்கிய கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் கட்சி, உலமாக்களின் ஐக்கிய முன்னணி, ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு, வடக்கு-கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, மற்றும் அஷ்ரப் காங்கிரஸ் என்பன இணைந்தே ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்தவுள்ளன.

இந்த அமைப்புக்களின் சார்பாக ஜனநாயக ஐக்கிய கூட்டமைப்பின் தலைவர் கபீப் நசீர் அகமட் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படவுள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளைப் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டின் இரு ஜனாதிபதி வேட்பாளர்களிடமும் முன்வைத்தும் அவர்களிடமிருந்து எவ்வித சாதகமான பிரதிபலனும் கிடைக்காத காரணத்தால் தாம் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படவுள்ளதாக நசீர் அகமட் தெரிவித்துள்ளார். (தே)

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து

# தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் வெள்ளியன்று ஆலோசனை!

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான அரசியல் கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களில் எவருக்கு ஆதரவை வழங்குவது என்பது குறித்து தீர்மானம் எடுப்பதற்காக - தமிழ் அரசியல் கட்சிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி கூடி ஆராயவுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளை இந்தக் கூட்டத்திற்கு அழைத்துள்ளதாகவும் -

தனது இல்லத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தமிழ்க் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் பலர் பங்கேற்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விடுதலைப் பேரொளி...

புலிகளின் பிரான்ஸ் கிளை துணைப் பொறுப்பாளர் நேரியன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கமும் அவரது துணைவியாரும் ஏற்றிவைத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

நூலின் முதற்பிரதியை மாவீரர் லெப். நாதனின் பெற்றோர் முத்துக்குமாரசாமி சற்குணம் பெற்றுக் கொண்டார். ஊடகவியலாளர்கள் சிவகுரு பிரேம் மற்றும் பற்பிமாகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தமிழீழத் தேசியத் தலைவரின் அரிதான ஒளிப்படங்கள் கள நிலைப் படங்கள் தாங்கி 296 பக்கங்களுடன் முழுமையான வண்ண வடிவமைப்பில் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழீழத் தேசியத் தலைவரின் வாழ்வியல் குறிப்புக்கள், சாதனைகள், எதிர்கொண்ட சோதனைகள் ஆகியவற்றையும் வெளிப்படுத்தி நிற்கும் இந்த நூல், ஒரு வரலாற்று ஆவணக் குறிப்பு நூலாக வெளியாகியுள்ளது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் பீட்டர் சார்க்கிள், கலாநிதி அல்பேட் கூலன், ராவய ஆசிரியர் விக்டர் ஐவன், கேணல் விதுஷா, வைகோ, பேராசிரியர் பிறைன் செனிவிரட்ன, க.வே.பாலகுமாரன், அப்துல் ஜபார், ச.பொட்டு, தமிழ்நதி, கரேன் பார்க்கர், ரம்சி கிளார்க், பழ.நெடுமாறன், தியாகு, இயக்குநர் சீமான், பேராசிரியர் இராமசுவாமி, சிவநேசச்செல்வன், கலையரசன், அனிதா பிரதாப் உட்பட தேசியத் தலைவரின் அருகே இருந்தவர்கள், தூரவிருந்து அவரின் திறனைக் கண்டு வியந்தவர்கள், விடுதலைப் போராளிகள், தளபதிகள், அரசியல் ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள், பேரறிஞர்கள், கவிஞர்கள், சிங்கள - ஆங்கில போராளர்கள் என 90 இற்கும் மேற்பட்ட ஆற்றலாளர்களின் எண்ணப்பதிவுகள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன.

## வவுனியா பிரகடனத்தை...

சிங்கள ஆட்சியாளர்கள் மேல் முழுமையாக நம்பிக்கையிழந்த நிலையில் எமது மக்கள் தமது சுதந்திர வாழ்வுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவை வேண்டி நிற்கின்றனர்.

சுயநிர்ணயத்தின் மூலம் சுதந்திரமாக, சமாதானமாக வாழும் அடிப்படை வாழ்வுரிமைக்காக கடந்த ஜூலை 27 ஆம் திகதி சர்வதேச சமூகத்திடம் அவர்கள் அறைகூவல் விடுத்தனர்.

ஜூலை 27 இல் வவுனியாவில் தமிழ்ச் சமூகத்தின் கல்விமான்கள், மதத்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் ஆகியோரை உள்ளடக்கிய பேராளர் மாநாட்டில் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

அவுஸ்ரேலிய அரசின் ஆதரவை இந்தப் பிரகடனத்தின்பால் ஈர்க்கும் தார்மீகப் பணி புலம்பெயர்ந்த எம்மைச் சார்ந்ததாகும்.

அத்தோடு, சமாதான முன்னெடுப்புக்களுக்கு அனுசரணையாளர்களாக உள்ளோரும் (அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான்) சர்வதேச சமூகத்தின் கொடுமுடியாக விளங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபையும் அண்மையில் வெளியிட்ட அறிக்கைகளுக்கு, அவுஸ்ரேலிய அரசின் ஆதரவைப் பெறுவது எமது கடமையாகும்.

ஜூலை 19 இல், சமாதான முன்னெடுப்புக்களுக்கு அனுசரணையாளராக இருக்கும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் போன்ற நாடுகள் வடக்கு - கிழக்கில் இயங்கும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவேண்டுமென வேண்டியுள்ளதையும் -

ஓகஸ்ட் 16 இல், ஐ.நா. பாதுகாப்புச் சபை - இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான யுத்தநிறுத்த உடன்படிக்கை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென வேண்டியதையும் - அவுஸ்ரேலிய அரசின் கவனத்திற்கும், ஆதரவிற்கும் கொண்டுவர ஒன்று திரள்வோம்.

இந்த ஒன்றுகூடலில் நாம் பெருந்திரளாகக் கலந்துகொள்வதன் மூலம் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சக அவுஸ்ரேலியர்களுக்கும் எமது மக்களின் வவுனியா பிரகடனத்தை முழுமையாக ஆதரிக்கிறோம் என்பதைத் தெரியப்படுத்தி, அதற்கு அவர்களது ஆதரவைப் பெற முடியும். இந்த ஒன்றுகூடலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கலந்துகொள்வார்.

குடும்பத்துடன் தவறாது வருகை தந்து எமது வரலாற்றுப்பணி செய்வோம் வாரீர் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஆசிரியர் தினத்தை புறக்கணித்து சுகவீன லீவுப் போராட்டத்தில் குதிப்பு!

## தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம் —

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி கொண்டாடப்படும் ஆசிரியர் தினத்தைப் புறக்கணித்து 23 கோரிக்கைகளை முன்வைத்து வடகிழக்கு மாகாண ரீதியில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுகவீன லீவுப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

இது தொடர்பாக தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழு கடந்த 11ஆம் திகதி கூடி முடிவெடுத்துள்ளது.

இலங்கையின் கல்வி நிலையில் தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது இதற்கமைய தமிழ் பிரதிக் கல்விப்பணிப்பாளர் நாயகம், தமிழ் பிரிவுப் பணிப்பாளர், தமிழ் மொழிப்பிரிவுப் பணிப்பாளர், இந்துசமய பணிப்பாளர், முஸ்லிம் பாடசாலை பணிப்பாளர், கோட்ட பாடசாலை பணிப்பாளர் ஆகிய பதவிகள் மீண்டும் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும், தேசிய கல்வி நிறுவனம், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கிளை ஒன்று வடக்கு - கிழக்கில் நிறுவப்படவேண்டும்.

இதைவிட வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு தவிர்ந்த உயர்கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம், தேசிய கல்வி ஆணைக்குழு, கல்வி வெளியீட்டுத்திணைக்களம், பரீட்சைத் திணைக்களம், ஆகியவற்றில் இனங்களின் வீதத்திற்கமைய பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பன போன்ற 23 கோரிக்கைகளை முன்வைத்து மேற்படி சுகவீன லீவுப் போராட்டம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்திற்கு தகுந்த தீர்வு கிடைக்காவிடின் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் வடக்கு கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் பாடசாலை உட்பட அனைத்து கல்வி செயற்பாடுகளும் முழுமையாக இடைநிறுத்தப்பட்டு தொடர்போராட்டம் ஒன்றை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் தொடர்பாக 23 கோரிக்கைகளும் சில தினங்களுக்கு முன்பே கல்வி அமைச்சின் செயலாளர் நாயகம் கலாநிதி தரா டி மெல்லுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் சுட்டுக்கொலை!

கம்பஹா —

கம்பஹா பொலிஸ் நிலையத்துக்கருகில் எரிபொரு நிரப்பு நிலைய ஊழியர் ஒருவர் நேற்றுக்காலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த எரிபொருள் நிலையத்தில் இரண்டு நாட்களாகக் கிடைக்கப்பெற்ற வருமானத்தை எரிபொருள் நிலையத்துக்கு முன்புறம் இருக்கும் வங்கியில் வைப்பீடு செய்வதற்காக நேற்றுக்காலை எரிபொருள் நிலைய ஊழியர் எடுத்துச்சென்றார்.

அவர் பாதையைக் கடக்கும் போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு அவரிடமிருந்த 20 லட்சம் ரூபா பணத்தையும் கொள்கையிட்டுச் சென்றனர்.

## இரு...

வகையில் செயற்பட்டுவருவதாகவும் அவர் அந்தச் செவ்வியில் கூறியுள்ளார். (01)

## மகிந்தவின்...

கொள்ளாததும் இவரின் வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

இதேவேளை - ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேசிய ரீதியில் வியாபார குழாம் தமது ஆதரவைப் பெருமளவில் தெரிவித்துள்ளது. அத்துடன் தனது வெற்றிக்காக எதிர்க்கட்சித் தலைவர் அரசியல் சாணக்கிய தந்திரங்களைக் கையாண்டு வருவதால் அவரது தேர்தல் நடவடிக்கையில் முன்னேற்றம் காணப்படுவதாகவும் - அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில்...

தடவைகள் சுடப்பட்டதாகவும், இதனால் அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்ததாகவும் தெரியவருகிறது.

சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் சடலத்தைப் பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளை நடத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இதேவேளை, சுட்டுக்கொல்லப்பட்ட நபர் இராணுவத்தினருடனும், பொலிஸாருடனும் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்ததாகவும், இதன் காரணமாகவே இவர் சுடப்பட்டிருப்பதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

## திருமலை...

இந்தக் கைக்குண்டுத் தாக்குதலின் பின்னர் சம்பவ இடத்துக்கு வந்த மோட்டார் சைக்கிள் ரோந்துப் படையினர் - வீதியால் சென்ற பொதுமக்களை வழிமறித்து கடுமையான சோதனைக்குட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04-10)

## நவம்பர் 17 இல்...

இந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக மகிந்த ராஜபக்ஷவும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிடுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதைத் தவிர ஐக்கிய சோசலிசக் கட்சி, முஸ்லிம் ஐக்கிய கூட்டமைப்புக் கட்சிகளின் வேட்பாளர்களும் போட்டியிடவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தேர்தலில் ஒரு கோடி 3 லட்சம் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் தமது வாக்குகளை அளிக்கும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

# குருதிக் கொடையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம் —

யாழ். போதனாவைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்ததானம் செய்த வடமாகாண தன்னார்வக் குருதிக் கொடையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ச்சியாக இரத்தானம் செய்யும் தன்னார்வ குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும், வரும்போது வழங்கப்பட்ட பதிவேட்டை உடன் கொண்டுவருமாறும் - இரத்த வங்கி வைத்திய அதிகாரி ஆர்.சிவசங்கர் தெரிவித்தார்.

இதேவேளை - இந்த நிகழ்வை இலங்கை தேசிய குருதிமாற்று பிரயோக சேவையாளர் ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# சோசலிச சமத்துவக்கட்சியும் வேட்பாளரை அறிவிப்பு!

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சியின் செயலாளர் விஜே டயஸ் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக சோசலிஸ சமத்துவக்கட்சி அறிவித்துள்ளது.

போருக்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஜனநாயக உரிமைகள் மீறப்படுவதைக்கண்டித்தும், தொழிலாளர்களின் நலன்களை கருத்திற்கொண்டும், ஜனாதிபதித் தேர்தலில் விஜே டயஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

அத்துடன், கட்சியின் பிரசார நடவடிக்கைகள் தொழிலாளர்கள், இளம் சமூகத்தினர் மற்றும் கிராம மட்டத்திலுள்ள வறுமையில் வாடுபவர்கள் மத்தியில் நடத்தப்படுவதுடன் நாட்டிற்கு தேவையான கொள்கை சமூக மற்றும் பொருளாதரா தேவைகள் குறித்தும் விவாதிக்கப்படுமென கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேல்நீதிமன்ற நீதிபதியாக தியாகேந்திரன் நியமனம்!

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதியாக திருகோணமலை மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய எஸ். தியாகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா கடந்த மாதம் 18 ஆம் திகதி ஓய்வுபெற்றத்தை அடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா 27 வருடகாலம் நீதித்துறையில் சேவையாற்றியவர்.

திருகோணமலைமாவட்டநீதிபதியாகக் கடமையாற்றிய நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா - 2000 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்று ஒரு வருடகாலம் கடமையாற்றிய பின்னர் 2001 ஆம் ஆண்டு யாழ். மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்றார்.

## திருகோணமலையில்...

புலிகள் மீது நடத்திவரும் தாக்குதல், அவசரகால நிலைமையைப் பயன்படுத்தி தமிழ்மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றைக் கண்டித்தும் -

கிழக்கில் விடுதலைப் புலிகள் உடனடியாக அரசியல் பணிகளை ஆரம்பிப்பதற்கு வசதியாக அவர்களுக்கான பாதுகாப்பும் உத்தரவாதமும் வழங்கப்படவேண்டும் எனக் கோரியும் -

பாடசாலைகள் வண்க்க ஸ்தலங்களில் நிலைகொண்டுள்ள படையினரை அகற்றுமாறும் -

நகரசபைக்குச் சொந்தமான காணியில் நிறுவப்பட்ட புத்தர் சிலையை அகற்றக்கோரியுமே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அரச திணைக்களங்கள் தனியார் நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் வங்கிகள் வர்த்தக நிலையங்கள் பாடசாலைகள் தனியார் கல்வி நிலையங்கள் யாவற்றையும் பூரணமாக மூடி துவிச்சக்கரவண்டி முச்சக்கர வண்டி உந்துருளிகள் உட்பட சகல போக்குவரத்துக்களையும் பூரணமாக நிறுத்தி வன்முறைக்கு இடங்கொடாது நகரை வெறிச்சோடச் செய்து இராணுவத்தை மட்டும் வீதியில் நிறுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

## படத்தை...

வழிமறித்துச் உடற் சோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது தேசிய அடையான அட்டையை இராணுவச் சிப்பாய் ஒருவர் கேட்டபோது தனது பேர்ஸினுள் இருந்த அடையாள அட்டையை எடுத்தவேளை அதனுள் இருந்த தேசியத் தலைவரின் படத்தைக் கண்டனர். அந்தப் படத்தைக் கடித்து வாய்க்குள் போட்டு விழுங்குமாறு பணித்தனர்.

இராணுவத்தினரின் மிரட்டலுக்கு அஞ்சிய இளைஞன் படத்தை கிழித்து விழுங்கிய பின்னரே அந்த இடத்திலிருந்து செல்ல படையினர் அனுமதித்ததாகத் தெரியவருகிறது. (4)

குருதிக்கொடையாளர் கௌரவிப்பு விழா
2005 செப்ரெம்பர் 21
மனிதகுருதிக்கு மாற்றீடு மனிதகுருதியே
இடம் : வீரசிங்கம் மண்டபம் நேரம் : காலை 9.00 மணி

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.